தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்தம்: தென் தமிழகத்தில் கனமழைக்கு வாய்ப்பு



கத்திரி வெயிலின் முதல் நாளான ஞாயிற்றுக்கிழமை பெய்த மழையில் நனைந்தபடி சைக்கிளில் செல்லும் சென்னைவாசி. (இடம்} அம்பத்தூர்)

**சென்னை,**

வங்கக் கடலில் நிலை கொண்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியின் காரணமாக தென் தமிழகத்தின் பல இடங்களில் திங்கள்கிழமை (மே 5) மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு வங்கக் கடலில், குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகியிருந்தது. இதனால் தமிழகத்தின் பல இடங்களில் கடந்த இரு தினங்களாக மழை பெய்து வருகிறது.

கோடை வெப்பம் வாட்டி வதைக்கும் இந்த வேளையில் மழை பெய்து வருவது பொதுமக்களை மகிழ்ச்சியடையச் செய்துள்ளது.

இந்நிலையில், தொடர்ந்து மழை பெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் ரமணன் கூறியது:

வங்கக் கடலில் உருவான காற்றழுத்தத் தாழ்வு நிலை, இப்போது குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக மாறியுள்ளது.

இது இப்போது, இலங்கைக்கு அருகில் நிலை கொண்டுள்ளது.

இதனால் தென் தமிழகத்தின் பல இடங்களில் மழையோ, இடியுடன் கூடிய மழையோ பெய்யும்; வடதமிழகத்தின் ஓரிரு இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி வலுவடைய வாய்ப்பில்லை என்று ரமணன் தெரிவித்தார்.

**அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற வேளாண் பல்கலை. முன்னாள் மாணவி கோவை,**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக முன்னாள் மாணவி சனிலா வெலிகெலாத் , அமைதிக்கான நோபல் பரிசு வென்றுள்ளார்.

இவர் 1989இல் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக இளநிலை (வேளாண்மை) படிப்பை மதுரையிலும், 1991இல் முதுநிலை (உயிரி தொழில்நுட்பவியல்) படிப்பை கோவையிலும் படித்தார்.

அதைத் தொடர்ந்து, சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் மூலக்கூறு உயிரியல் ஆய்வகத்தில் இரண்டு ஆண்டுகள் பணி புரிந்தார். பின்னர் ஆம்ஸ்டர்டாம் பல்கலைக்கழகத்தில் 2005 ஆம் ஆண்டில் தனது மேம்பட்ட முதுநிலை படிப்பை (சுற்றுச்சூழல் மேலாண்மை) பயின்றார்.

ரசாயன ஆயுதங்களை தடை செய்யும் அமைப்பில் தொழில்நுட்ப ஆய்வகத்தில் சரிபார்ப்புப் பிரிவில் உதவியாளராக 2007 ஆம் ஆண்டுமுதல் பணிபுரிந்து வருகிறார். இந்த ஆய்வகம் 190 நாடுகளில் 500 உறுப்பினர்களை கொண்ட ஓர் அமைப்பாகும். இவ்வமைப்பின் கடந்த 16 ஆண்டு சேவையை அங்கீகரிக்கும் வகையில் மதிப்புமிக்க அமைதிக்கான நோபல் பரிசு-2013 வழங்கப்பட்டது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக முன்னாள் மாணவியான சனிலா வெலிகெலாத் இந்த அமைப்பின் ஓர் உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வு பல்கலைக்கழகத்திற்கு பெருமை சேர்ப்பதாக உள்ளது என பல்கலைக்கழக துணைவேந்தர் கு.ராமசாமி தெரிவித்தார்.

**வேளாண் பட்டதாரி மாணவர்கள் மாநாடு நாளை துவக்கம்**

**கோவை,**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண் பட்டதாரி மாணவர்கள் மாநாடு மே 6, 7 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது.

இந்தியாவின் முன்னேற்றத்தில் வளங்குன்றா வேளாண்மை மூலம் ஒருங்கிணைந்த கல்வி மற்றும் உணவளித்தல் என்ற தலைப்பின் கீழ் நடைபெறும் மாநாட்டில், முதுநிலை மற்றும் வேளாண் சார்ந்த கல்வி பயிலும் மாணவர்கள் பங்கேற்கின்றனர்.

இதன்மூலம் வேளாண்மைப் பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவர்களின் ஆராய்ச்சி மற்றும் கருத்து பரிமாற்றத் திறன் அதிகரிக்க வழிவகுக்கிறது.

மேலும், வேளாண் கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதுடன், எதிர்கால தேவைகளை திட்டமிட்டு வடிவமைக்கும் இடமாக அமைவதோடு மட்டுமின்றி, ஒருங்கிணைந்த வளர்ச்சியை அடையும் நோக்கில் வேளாண் உற்பத்தியை அதிகரிக்கத் தேவையான அனைத்து கண்டுபிடிப்புகள் பற்றியும், எதிர்கால வேளாண் திட்டங்கள் திட்டமிடுதல் பற்றியும் கருத்து பரிமாற்றத்துடன் கூடிய கருத்தரங்கமாக அமையும். தேசிய அளவில் 500 முதுநிலை மாணவர்கள் பங்கேற்கும் கருத்தரங்கில், 79 ஆராய்ச்சி கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட உள்ளது என கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளர் எஸ்.மோகன் தெரிவித்துள்ளார்.

**ஞாயிற்றுக்கிழமை காலை வரையிலான 24 மணிநேரத்தில் தமிழகத்தில் பெய்த மழை அளவு (மில்லி மீட்டரில்):**

குடவாசல், கமுதி - 70, பேரையூர், ராஜபாளையம் - 50, கோத்தகிரி, நாகர்கோவில், ராசிபுரம் - 40, சிவகிரி, சோழவந்தான், வாழப்பாடி, வலங்கைமான், குழித்துறை, பொள்ளாச்சி, திண்டுக்கல், வால்பாறை - 30, உத்தமபாளையம், பூதபாண்டி, உசிலம்பட்டி, குன்னூர், மன்னார்குடி, கூடலூர், ஸ்ரீவில்லிபுத்தூர், ஆலங்காயம்,

காரைக்குடி, கடலூர், ஆரணி, அரியலூர், கொடைக்கானல் - 20, பழனி, திருத்தணி, வாடிப்பட்டி, தென்காசி - 10.

**மழையுடன் தொடங்கியது கத்திரி: வெப்பம் தணிந்தது**



**சென்னை,**

வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளதால் தமிழகத்தில் கத்திரி வெயில் ஞாயிற்றுக்கிழமை மழையுடன் தொடங்கிது.

ஆரம்பமே வெயில் தணிந்து குளிர்ந்த சீதோஷ்ண நிலை உருவானதால் மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தமிழகத்தில் கடந்த சில வாரங்களாக கடுமையான வெயில் நிலவி வருகிறது. பல மாவட்டங்களில் 106, 107 டிகிரி அளவில் வெயில் பதிவானது. இந்த நிலையில், அக்னி நட்சத்திரம் எனப்படும் கத்திரி வெயில் ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது. இதுவரை கடுமையான வெப்பம் நிலவியதால், கத்திரி வெயிலின் தாக்கம் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், தற்போது வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகத்தின் பல இடங்களில் மழை பெய்து வருகிறது. இதனால் கத்திரி வெயிலின் முதல் நாளான ஞாயிற்றுக்கிழமை சீதோஷ்ண நிலையில் மாற்றம் தென்பட்டது. சில நாள்களுக்கு மழை தொடரும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளதால் இந்த ஆண்டு அக்னி வெயிலின் தாக்கம் பெருமளவில்

இருக்காது என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர். இருப்பினும் வங்க கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை தொடர்வதே பொறுத்தே வெயிலின் நிலைமை தெரியவரும். காற்றழுத்த தாழ்வு நிலை பலவீனமடைந்தால் வெயிலின் தாக்கம் அதிகரிக்க தொடங்கும்.


அதேவேளையில், தமிழகத்தில் அதிகபட்சமாக தருமபுரி, பாளையங்கோட்டை, திருப்பத்தூர் (வேலூர் மாவட்டம்), வேலூர் ஆகிய இடங்களில் ஞாயிற்றுக்கிழமை 100 டிகிரி வெயில் பதிவானது. ஞாயிற்றுக்கிழமை பதிவான வெயில் அளவு (டிகிரி பாரன்ஹீட்டில்):

கரூர் பரமத்தி, சேலம், திருச்சி - 99

மதுரை, கோவை - 97, சென்னை - 96

கொடைக்கானல் - 66.

**வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை: கனமழைக்கு வாய்ப்பு**



**சென்னை,**

தென்மேற்கு வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளது. இதன் காரணமாக தமிழகத்தில் அடுத்த 24 மணி நேரத்தில் கடலோர மாவட்டங்களில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளது என வானிலை ஆராய்ச்சி மைய இயக்குநர் ரமணன் தெரிவித்தார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் சனிக்கிழமை அவர் கூறியதாவது:

தென்மேற்கு வங்கக் கடலில் புதிதாக குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளது. இந்த நிலை தமிழகத்துக்கு வெகு அருகில் பதிவாகியுள்ளது. இதன் காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

கோடையில் கடுமையான வெயிலால் மக்கள் அவதிப்படும் நிலையில், குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி இருப்பது ஆறுதல் அளிப்பதாக உள்ளது.

சென்னையைப் பொருத்தவரை அடுத்த 48 மணி நேரத்தில் நகரில் ஆங்காங்கே மழை பெய்ய வாய்ப்புள்ளது. கடலோர மாவட்டங்களில் கன மழையை எதிர்பார்க்கலாம்.

மழை: கடந்த 24 மணி நேரத்தில் வெப்ப சலனம் காரணமாக தமிழகத்தில் பல இடங்களில் கனமழை பெய்துள்ளது. ராமநாதபுரம் மாவட்டம் கமுதியில் 70 மி.மீட்டரும், உதகை, சிவகிரி, தக்கலை ஆகிய இடங்களில் தலா 60 மி.மீட்டரும், கன்னியாகுமரி மாவட்டம் இரணியலில் 50 மி.மீட்டர் மழையும் பதிவாகியுள்ளது. மானாமதுரை, குளித்தலை, நாகர்கோவில், திருச்செந்தூர், ஒட்டப்பிடாரம், அறந்தாங்கி ஆகிய இடங்களிலும் தலா 40 மி.மீட்டர் மழை பெய்துள்ளது. மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் பரவலான மழை பெய்துள்ளது எனவும் சென்னை வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

## பாம்பனில் சிக்கிய அரிய வகை மீன்கள்



வலையில் சிக்கிய அரிய வகை லோப் மீன்களுடன் பாம்பன் மீன்வர்கள்.



வலையில் சிக்கிய சிங்கி மீன்கள்.

**ராமேசுவரம்,**

பாம்பன் பகுதியிலிருந்து கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற நாட்டுப் படகு மீனவர்களின் வலையில் லோப், சிங்கி என்ற அரிய வகை மீன்கள் சிக்கின.

பாம்பன் பகுதியிலிருந்து வெள்ளிக்கிழமை காலை நூற்றுக்கும் மேற்பட்ட நாட்டுப் படகு மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குச் சென்றனர். இவர்கள் தனுஷ்கோடி, மன்னார் வளைகுடா பகுதியில் மீன் பிடித்துள்ளனர். அப்போது எடிசன் என்பரின் படகில் மீனவர்கள் கடலில் விரித்திருந்த வலையில் 4 லோப் பிஷ் என்ற மீன்களும், 20-க்கும் மேற்பட்ட சிறிய சிங்கி ரக மீன்களும் சிக்கின. இவை மிகவும் அரிய வகை மீன்களாகும்.

இந்த மீன்களை சனிக்கிழமை காலையில் மீனவர்கள் பாம்பன் பகுதிக்கு கொண்டு வந்தனர். லோப் மீன்கள் ஒவ்வொன்றும் 2 அடி முதல் 3 அடி உயரத்திலும் 5 முதல் 8 கிலோ வரை எடையும் இருந்தன.

இந்த மீன் இதுவரை வலையில் படவில்லை. இது புதிய ரக மீனாக இருப்பதால் உணவுக்கு பயன்படுத்தலாமா? என்ற சந்தேகம் மீனவர்கள் மத்தியில் ஏற்பட்டது. இதனால் இந்த மீனை பொதுமக்களோ, வியாபாரிகளோ வாங்கவில்லை.

மேலும், அரிய வகையான 100 கிராம் எடையுள்ள உயிருடன் இருந்த சிங்கி மீனை வியாபாரிகள் வெளி நாட்டுகளுக்கு அனுப்பும் நோக்கத்தோடு தலா ரூ.500 வரை விலை கொடுத்து வாங்கிச் சென்றனர்.

## கோடையில் மழை: மாமல்லபுரத்தில் சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சி

## செங்கல்பட்டு

தமிழக கடலோரப் பகுதிகளான மாமல்லபுரம், கல்பாக்கம், சட்ராஸ் உள்ளிட்ட பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை கனமழை பெய்தது. இதனால் மாமல்லபுரம் வந்த சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

கோடை வெப்பத்தில் தவித்த சுற்றுலாப் பயணிகள் திடீர் மழை காரணமாக பெருமகிழ்ச்சி அடைந்தனர். மழையில் நனைந்துக் கொண்டே சிற்பங்களை ரசித்தனர்.

தென்மேற்கு வங்கக் கடலில் புதிதாக குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளதாக சனிக்கிழமை வானிலை ஆராய்ச்சி மையம் அறிவித்திருந்தது. மேலும் தமிழகத்தில் கடலோர மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் கூறப்பட்டது.

கோடையில் கடுமையான வெயிலால் வெப்பத்தைத் தாங்க முடியாமல் மக்கள் அவதிப்பட்டனர்.

இந்நிலையில் கடலோரப் பகுதிகளான கல்பாக்கம், சட்ராஸ், புதுபட்டினம், மாமல்லபுரம் மற்றும் திருக்கழுகுன்றம், திருப்போரூர், செங்கல்பட்டு மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை வானத்தில் கருமேகம் படையெடுத்து வருவதைக் கண்டு கனமழை பெய்யப் போகிறது, அதனால் வெப்பம் தணியும் என நினைத்து மக்கள் பெருமகிழ்ச்சி அடைந்தனர்.

ஆனால் செங்கல்பட்டு, திருப்போரூர், திருக்கழுகுன்றம் ஆகிய பகுதிகளில் வானத்தில் வேகமாக சூழ்ந்த கருமேகங்கள் அதே வேகத்தில் கலைந்துச் சென்றன.

இதனால் இப்பகுதிகளில் சிறுதூறல் மழை 5 நிமிடங்கள் மட்டுமே சிறுதுளிபோல் விழுந்து நின்றதில் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை ஏமாற்றம் அடைந்தனர்.

எனினும் கடலோரப் பகுதிகளான மாமல்லபுரம், கல்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் வெயிலின் வெப்பத்தைத் தணிக்கும் வகையில் மழை பெய்தது.

இதனால் அப்பகுதி மக்கள் மழையில் நனைந்து மகிழ்ந்தனர். மேலும் மாமல்லபுரத்துக்கு சுற்றுலா வந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணிகள் திடீர் மழையை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

சுற்றுலாப் பயணிகள் மழையில் நனைந்தபடியே அரச்சுனன் தபசு, வெண்ணெய் உருட்டை பாறை, ஐந்து ரதங்கள் ஆகிய பகுதிகளை சுற்றிப் பார்த்து மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்தபடி சிற்பங்களை ரசித்தனர்.

**பூமியை குளிர்வித்த திடீர் கோடை மழை**

**திருவள்ளூர்,**

கத்தரி வெயில் தொடங்கிய நிலையில் திருவள்ளூர் மற்றும் சுற்றுப்பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை திடீர் மழை பெய்தது.

இதனால் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

கடந்த ஏப்ரல் மாதத்தின் தொடக்கத்திலிருந்தே தமிழகம் முழுவதும் கோடை வெயிலின் உக்கிரம், மக்களை வாட்டி வருகிறது.

இந்நிலையில் கோடையின் உச்சக்கட்டமாக கருதப்படும் அக்னி நட்சத்திரம் எனப்படும் கத்திரி வெயில் ஞாயிற்றுக்கிழமை முதல் தொடங்கியுள்ளது.

இதையொட்டி திருவள்ளூர், கடம்பத்தூர், பூண்டி, பெரியகுப்பம், மணவாளநகர் உள்ளிட்ட மாவட்டத்தின் பல பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் திடீர் மழை பொழிந்தது.

இந்த மழை, 30 நிமிடங்களுக்கும் மேலாக நீடித்து பூமியை குளிர வைத்தது. இதனால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக இந்த மழை பெய்தது.

**கோடையில் திடீர் மழை: விவசாயிகள், மக்கள் மகிழ்ச்சி**

**திருத்தணி,**

கோடை வெயில் மக்களை வாட்டி வதைத்து வந்த நிலையில் சனிக்கிழமை பெய்த திடீர் மழையால் விவசாயிகள் மற்றும் நகர மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். இதனால் சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. பருவமழை பொய்த்துவிட்டதால் கடந்த சில வாரங்களாகவே வறட்சி நிலவி வருகிறது. நீர் நிலைகள் அனைத்தும் வறண்டு விட்டதால், நெல் சாகுபடி வெகுவாக பாதிக்கப்பட்டது. விவசாயிகள்

மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர். மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண உதவி வழங்க வேண்டும் என்ற கோரிக்கையும் விவசாயிகளிடத்தில் வலுத்து வந்தது.

வேலூர், திருத்தணி, அரக்கோணம், சென்னை உள்ளிட்ட ஊர்களில் நாளுக்கு நாள் வெயில் வாட்டி வதைத்து வருகிறது. கடுமையான வெயிலால் மக்களின் இயல்பு வாழ்க்கையும் வெகுவாக பாதிக்கப்பட்டது. இந்நிலையில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட மழை சனிக்கிழமை மாலை 4 மணி முதல் 5 மணி வரை கொட்டி தீர்த்தது. இந்த திடீர் மழையால் திருத்தணி ம.பொ.சி. சாலை, சன்னதி தெரு, பஸ் நிலையம், அரக்கோணம் சாலை ஆகிய பகுதிகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது.

மேலும் ஆங்காங்கே இருக்கும் கழிவுநீர் கால்வாய்களில் அடைப்பு ஏற்பட்டதால் கழிவுநீருடன் கலந்து மழைநீர் சென்றது.

இதனால் சாலைகளில் துர்நாற்றம் வீசியது. அதேபோல் திருத்தணி சிண்டிகேட் வங்கி எதிரில் உள்ள கால்வாயில் அடைப்பு ஏற்பட்டதால் அப்பகுதியில் மழைநீர் குளம்போல் தேங்கி நின்றது.

இதனால் அவ்வழியாக வந்த பஸ், கார், லாரி, ஆட்டோ உள்ளிட்ட வாகனங்கள் மழைநீரில் நீந்தியவாறு சென்றதால் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

இந்த திடீர் மழையால் விவசாயிகள் மற்றும் நகர மக்கள் சந்தோஷத்தில் மூழ்கினர்.

**மழையுடன் தொடங்கியது அக்னி நட்சத்திரம்**

**மதுரை,**

மதுரையில் அக்னி நட்சத்திரம் மழையுடன் தொடங்கியிருப்பது பொதுமக்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மதுரை நகரில் கடந்த சில வாரங்களாக கடும் வெப்பம் நிலவியது. இதனால், நிலத்தடி நீர்மட்டம் அதளபாதாளத்துக்குச் சென்றதால், தண்ணீர் தட்டுப்பாடு கடுமையாக இருந்தது. எனவே, பல திருக்கோயில்களில் மழை வேண்டி வருண

ஜபம் நடத்தப்பட்டன. அதேபோல், மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலிலும் சித்திரைத் திருவிழா கொடியேற்றத்துக்கு முன் வருண ஜபம் நடத்தப்பட்டது.

அதையடுத்து, மதுரை உள்ளிட்ட தென்மாவட்டங்களில் திடீரென மழை பெய்தது.

தொடர்ந்து, மதுரை மாவட்டத்தில் கடந்த 3 நாள்களாக குறிப்பிடத்தக்க அளவுக்கு மழைப் பொழிவு இருந்து வருகிறது. இதனால், வெப்பத்தின் கடுமை குறைந்து, குளுமையான சூழல் நிலவி வருகிறது.

இத்தகைய சூழலில் ஞாயிற்றுக்கிழமை அக்னி நட்சத்திரம் தொடங்கியது. இதனால், வெப்பத்தின் தாக்கம் அதிகமிருக்கும் என மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால், மதுரையில் ஞாயிற்றுக்கிழமை காலையில் அதிக வெப்பமின்றி, வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது.

அதையடுத்து, மாலையில் கருமேகத்துடன் காணப்பட்ட வானம், பின்னர் காற்றுடன் மழை பெய்தது. நகர் பகுதிகளிலும் மற்றும் மேலூர், வாடிப்பட்டி, அலங்காநல்லூர் உள்ளிட்ட ஊரகப் பகுதிகளிலும் சிறிது நேரம் மழை பெய்தது. இதனால், நகரின் பல்வேறு இடங்களில் சாலையில் மழை நீர் தேங்கியது.

சனிக்கிழமை மாலை வரை மதுரை மாவட்டத்தில் பெய்த மழை அளவு விவரம் (மில்லி மீட்டரில்): வாடிப்பட்டி ஆண்டிப்பட்டி பங்களா 14.2, மதுரை 3.4, விரகனூர் 4.3, சாத்தையாறு அணை 30.2, மேட்டுப்பட்டி 18, கள்ளந்திரி 25.4, சிட்டம்பட்டி 4, புலிப்பட்டி 15.6, மேலூர் 9.6, இடையபட்டி 8, விரகனூர் 4.3.

## பருத்தி சாகுபடியில் அதிக மகசூல் பெறவிவசாயிகளுக்கு டி.வி. மூலம் ஆலோசனை

**கமுதி,**

விவசாயிகள் பருத்தி சாகுபடியில் அதிக மகசூல் பெறுவது குறித்து, உள்ளூர் டி.வி. ஒளிபரப்பு மூலம் ரிலையன்ஸ் அறக்கட்டளை ஏற்பாட்டில் வெள்ளிக்கிழமை ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

ராமநாதபுரம் மாவட்டம் கமுதி, முதுகுளத்தூர், கடலாடி ஆகிய தாலுகாக்களைச் சேர்ந்த பருத்தி சாகுபடி விவசாயிகளுக்கு பயனளிக்கும் வகையில் பருத்தி

சாகுபடியில் அதிக மகசூல் அடைவது குறித்து எம்ஜிவி உள்ளூர் டி.வி. ஒளிபரப்பு மூலம் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

எந்தெந்த பருவத்தில் உகந்த ரக பருத்தி பயிரிடுதல், சப்பை உதிர்வைத் தடுத்தல், காய்ப்புழு, வண்டுகள், பூச்சிகள் தாக்குதலைத் தடுத்தல், வேர் வாடல் நோய் தடுத்தல், மெக்னீசியம், போராஸ் சத்து குறைபாடு பிரச்சினைகள் தவிர்த்தல், அதிக மகசூல் வழிமுறைகள், நீர்ப்பாசன முறைகள் ஆகியவை குறித்து வேளாண் தொழில் நுட்ப வல்லுநர் செந்தில்குமார் ஆலோசனைகள் வழங்கினார்.

உள்ளூர் டி.வி. ஒளிபரப்பின்போது, பருத்தி சாகுபடி குறித்த விவசாயிகளின் சந்தேகங்களுக்கு செல்பேசி மூலம் தொழில் நுட்ப வல்லுநர் செந்தில்குமார் விளக்கமளித்தார்.

உள்ளூர் டி.வி. ஒளிபரப்பின் மூலம் அதிக பயனடைந்ததாக விவசாயிகள் தெரிவித்தனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை ராமநாதபுரம் மாவட்ட ரிலையன்ஸ் அறக்கட்டளை திட்ட அலுவலர் ஆர்.ஸ்ரீகிருபா ராமநாதன் உள்பட பலரும் செய்திருந்தனர்.

## கமுதி பகுதியில் கோடை உழவு தீவிரம்

**கமுதி,**

கமுதி பகுதியில் கடந்த 3 நாள்களாக பெய்த மழை காரணமாக கோடை உழவு தீவிரமாக நடைபெற்று வருகிறது.

கமுதி பகுதி ஊர்களில் 3-வது நாளாக சனிக்கிழமையும் 68 மி.மீ. மழை பெய்துள்ளது. அதற்கு முந்தைய நாள்களில் முறையே 64.7 மி.மீ, 66 மி.மீ என்ற அளவில் மழை பெய்தது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து பெய்த மழை காரணமாக கமுதி பகுதி ஊர்களில் விவசாயிகள் கோடை உழவில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

மழை காரணமாக பள்ளங்களிலும், சிறிய குட்டைகளிலும் தண்ணீ0ர் தேங்கிக் கிடக்கிறது. கமுதி அரசு மருத்துவமனைக்குள்ளும், வெளியேயும் மழை தண்ணீர் தேங்கிக்கிடக்கிறது. எனவே பேரூராட்சி நிர்வாகம், உடனடியாக நடவடிக்கை எடுத்து, மழைத் தண்ணீரைத் தேங்க விடாமல் தடுக்க வேண்டும் என்று, நோயாளிகளும், மருத்துவமனையினரும் வலியுறுத்துகின்றனர்.

**கீழக்கரையில் கன மழை**

**கீழக்கரை,**

ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையில் ஞாயிற்றுக்கிழமை கனமழை பெய்தது.

கீழக்கரை மற்றும் அதன் சுற்றப்புற பகுதிகளில் கடந்த சில தினங்களாக வெயிலின் தாக்கம் மிகக் கடுமையாக இருந்தது. இதனால் வீட்டில் உள்ள கிணறுகளில் தண்ணீர் இறங்கியும், ஏரி, குளங்கள் நீர் வற்றிய நிலையிலும் காணப்பட்டது. இதனால் கீழக்கரையில் குடிநீர் தட்டுபாடு ஏற்பட்டது.

மேலும் அக்னி நட்சத்திரம் துவங்கிய நிலையில் ஞாயிற்றுகிழமை அதிகாலையில் லேசான மழையும், பகலில் பலத்த மழையும் பெய்தது.

இதனால் கீழக்கரை, மாயாகுளம், தில்லையேந்தல், காஞ்சிரங்குடி ஆகிய பகுதிகளில் மழைநீர் தெருக்களிலும் சாலைகளிலும் ஓடியது. இதன் காரணமாக வெப்பம் தணிந்தது. இரவில் குளிர்ந்த காற்று வீசியது.

**சிவகாசியில் மழை**

**சிவகாசி,**

சிவகாசியில் ஞாயிற்றுக்கிழமை மிதமான மழை பெய்தது. சிவகாசி பகுதியில் கடந்த சில மாதங்களாக கடும் வெயில் வாட்டி வதைக்கிறது. இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை அக்னிநட்சத்திரம் தொடங்கியுள்ளது. இந்த நிலையில் மழையை பொதுமக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை மாலை சுமார் 3 மணி முதல் 3.10 வரை லேசான மழை பெய்தது. இதனால் சற்று வெப்பம் தணிந்தது.

**கோடையிலும் வருவாயை ஈட்டித் தரும் நித்திய கல்யாணி மூலிகை செடி சாகுபடி**

**விருதுநகர்,**

விருதுநகர் மாவட்ட பகுதியில் கடும் கோடையிலும் நித்திய கல்யாணிச் சாகுபடி மகசூல் அதிகரித்துள்ள நிலையில், ஏற்றுமதியில்லாத காரணத்தால் விலைக் குறைந்துள்ளதோடு வியாபாரிகளும் வாங்க முன் வராததால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

விருதுநகர் மாவட்டம் கடும் வறட்சியான பகுதி என்பதால், மழை பெய்தால் தான் விவசாயம் என்கிற நிலையே நீடித்து வருகிறது. எனவே கோடை, வறட்சியையும் தாங்கி வளரக் கூடிய நித்திய கல்யாணி எனும் மூலிகைப் பயிரை கிராமங்களில் விவசாயிகள் ஆர்வத்தோடு பயிரிட்டு வருகின்றனர். முக்கியமாக புற்றுநோயை கட்டுப்படுத்தும் மருத்துவக்குணம் கொண்ட பயிராகவும் இது உள்ளது.

இதனால் இப்பயிரை விருதுநகர் பகுதியில் பேராளி, சின்னப்பேராளி, குல்லூர் சந்தை, சிவஞானபுரம், பாவாலி, ஆமத்தூர், சின்னப்ப நாயக்கன்பட்டி, செங்கோட்டை, அப்பையநாயக்கன்பட்டி, ஆர்.ஆர். நகர், ஏ. புதுப்பட்டி, எரிச்சநத்தம், ஒத்தையால், புதுப்பட்டி, ஆமணக்குநத்தம், வெம்பக்கோட்டை, சிவகாசி, ஜமீன்சல்வார்பட்டி, தாயில்பட்டி, படந்தால், நரிக்குடி, திருச்சுழி உள்ளிட்ட பகுதிகளில் கண்ணுக்கு எட்டிய தூரம் வரையிலும், மானாவாரியிலும், இறவைப் பாசனம் மூலமும் 25 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் விவசாயிகள் பயிரிட்டுள்ளனர்.

பணப்பயிர்களை பயிரிட்டால் பராமரிப்பு செலவு அதிகரிக்கிறது. மகசூல் எடுக்கும் நேரத்தில் விலைக் குறைவால் விவசாயிகள் நஷ்டமடைய நேரிடுகிறது. இதுபோன்ற காரணங்களால் அதிகம் பராமரிப்பு இல்லாத நித்திய கல்யாணிச் செடியை ஆர்வத்துடன் விவசாயிகள் பயிரிடுகின்றனர். ஒரு ஏக்கரில் சாகுபடி செய்ய நன்றாக உழவு செய்து, 2 கிலோ விதை வாங்கி விதைப்பு பணிகளை மேற்கொள்ளும் வரையில் ரூ.5 ஆயிரம் வரை செலவாகும். மேலும், ஒரு முறை விதைத்தால், 3 முறை அறுவடை செய்யலாம். வறட்சியைத் தாங்கி வளரும் பயிரானாலும், தொடர்ந்து 3 நாள்கள் மழை பெய்தால் மகசூல் கடுமையாக பாதிக்கும்.

ஒரு ஏக்கரில் தண்ணீர் வசதியோடு பயிரிட்டால் முதல் அறுவடை 85 நாள்களில் 15 குவிண்டாலும், அதே போல், 2ஆவது 65 நாள்களில் அறுவடை செய்தால் 12 குவிண்டாலும், 3ஆவது முறையாக 45 நாள்களில் அறுவடை செய்தால் 10 குவிண்டாலும் என ஒரே விதைப்பில் மூன்று அறுவடைகளை மேற்கொள்ள முடியும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மானாவாரியில் மேற்கொண்டால் இதைவிடக் குறைவாக இருக்கும். இந்நிலையில் கடந்த ஆண்டு ஒரு குவிண்டால் ரூ.5300 வரையில் விலை போனது. ஆனால்,

இம்முறை ஏற்றுமதி இல்லையென கூறியும், சிண்டிகேட் அமைத்து வியாபாரிகள் ரூ.2500 முதல் ரூ.3000 வரையில் தான் வாங்குவதாக விவசாயிகள் வருத்தத்துடன் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக தோட்டக் கலைத் துறை துணை இயக்குநர் ராதாகிருஷ்ணன் கூறியதாவது: நித்திய கல்யாணிச் சாகுபடி என்பது மற்ற பயிர்களை விட பராமரிப்பு செலவு குறைவு. எனவே இப்பயிரை விருதுநகர் மாவட்ட பகுதிகளில் அதிகளவு விளை நிலங்களில் பயிரிட்டு வருகின்றனர். அதோடு, தேவைக்கு ஏற்ப போதுமான விலை கிடைத்து வந்த நிலையில், தற்போது குறைந்துள்ளது.

மூலிகைச் செடிகளை உற்பத்தி செய்யும் விவசாயிகளை அரசு ஊக்குவிப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இப்பயிருக்கு ஏக்கருக்கு ரூ.2 ஆயிரம் வரையில் மானியம் வழங்குகிறது. அதே போல், அவுரி மூலிகை செடிக்கு தோட்டக் கலைத் துறை மூலம் ஏக்கருக்கு ரூ.5 ஆயிரம் வரையில் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது நித்திய கல்யாணி செடியை அதிகம் பயிரிடும் விவசாயிகளுக்கு அவர்கள் நஷ்டமடையாமல் இருக்கும் வகையில் கூடுதலாக மானியம் வழங்க அரசுக்கு பரிந்துரை செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

## தேனி மாவட்டத்தில் பரவலாக மழை: வைகை அணைக்கு நீர் வரத்து

**ஆண்டிபட்டி,**

தேனி மாவட்டத்தில் பரவலாக மழை பெய்துள்ளதால் வைகை அணைக்கு சனிக்கிழமை மாலைமுதல் நீர் வரத்துவங்கியுள்ளது.

தேனி மாவட்டத்தில் கடந்த இரண்டு வருடங்களாக போதிய மழை இல்லாததால் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வருகிறது. அணைகளின் நீர்மட்டமும் வேகமாக சரிந்து வருகிறது. நீர்பிடிப்பு பகுதிகளில் போதிய மழை இல்லாததால் வைகை அணையின் நீர் மட்டம் குறைந்து வருகிறது. தற்போது 21.39 அடி மட்டுமே நீர் இருப்பு உள்ளது. இதில் 20 அடி வரை சேறு, சகதிகள் தேங்கியுள்ளனய 2 அடி தண்ணீரை மட்டுமே குடிநீருக்கு பயன்படுத்தும் நிலையில் உள்ளது.

தற்போது இருக்கும் நீரை வைத்து 4 நாள்கள் மட்டுமே மதுரை மற்றும் ஆண்டிபட்டி-சேடபட்டி கூட்டு குடிநீர் திட்டத்திற்கு பயன்படுத்தமுடியும். வைகை

அணைக்கு நீர் வரத்து வந்தால் மட்டுமே தண்ணீர் பற்றாக்குறையை போக்கமுடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

தேனி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக வெப்பசலனத்தால் மழை பெய்துவந்தது. சனிக்கிழமை இரவு தேனி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் மழை பெய்துள்ளது. இதனால் வைகை அணைக்கு 5 கன அடி வீதம் சனிக்கிழமை இரவு நீர் வரத்து துவங்கியுள்ளது. இதன் அளவு அதிகரித்து தொடர்ச்சியாக மழை பெய்தால் அணையின் நீர் மட்டம் உயரும். இல்லையேல் குடிநீருக்கு சிரமபட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

## ஒட்டன்சத்திரத்தில் கோடை மழை: விவசாயிகள் மகிழ்ச்சி

**ஒட்டன்சத்திரம்,**

ஒட்டன்சத்திரத்தில் கோடை மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைத்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் பகுதியில் கடந்த 2 ஆண்டுகளாக போதிய மழை இல்லாமல் விவசாயம் முற்றிலும் பாதிக்கப்பட்டது. குடிநீர் தட்டுப்பாடும் அதிகரித்தது. கால்நடைகளுக்கு போதிய தீவனங்கள் கிடைக்காததால், விவசாயிகள் அடிமாட்டு விலைக்கு விற்பனை செய்து வந்தனர். ஒட்டன்சத்திரம் பகுதியில் 1200 அடி ஆழத்துக்கு ஆழ்குழாய் கிணறு அமைத்தாலும் தண்ணீர் கிடைக்கவில்லை.

நிலத்தடி நீர் மட்டம் மிகவும் குறைந்து விட்டது.இதனால் விவசாயிகள் விரக்தியில் இருந்து வந்தனர்.இந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை மூலச்சத்திரம், கேதையுறும்பு, காளாஞ்சிபட்டி,சிந்தலப்பட்டி, தங்கச்சியம்மாபட்டி, கொசவபட்டி உள்பட பல கிராமங்களில் கோடை மழை சுமார் அரைமணி நேரம் பெய்தது.

இதனால் வெப்பம் ஒரளவிற்கு தணிந்தது.

இந்த கோடை மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைத்துள்ளனர்.

**காய்கறி கண்காட்சி நிறைவு : சிறந்த அரங்குகளுக்கு பரிசு**

**உதகை / கோத்தகிரி,**

கோத்தகிரி நேரு பூங்காவில் கடந்த 2 நாள்களாக நடைபெற்ற காய்கறி கண்காட்சி ஞாயிற்றுக்கிழமை மாலை நிறைவடைந்தது. இதில் சிறந்த அரங்குகளுக்கு ஆட்சியர் பி.சங்கர் பரிசுகளை வழங்கினார்.

இக் கண்காட்சியில் தட்பவெப்ப நிலைக்கேற்ற சிறந்த காய்கறி சாகுபடிக்கான ஹிட்டக்கல் சுழற்கோப்பையும், சிறந்த காய்கறி தோட்டத்திற்கான சுழற்கோப்பையும் உதகையை சேர்ந்த விவசாயி இ.கிருஷ்ணப்பாவுக்கு வழங்கப்பட்டது. அதேபோல, சிறந்த காய்கறிகளுக்கான சுழற்கோப்பை உதகையை சேர்ந்த ரமேஷுக்கு வழங்கப்பட்டது.

200 முதல் 500 ச.மீ. பரப்பளவிலான சிறந்த காய்கறி தோட்டத்துக்கான பாண்டியராஜ் சுழற்கோப்பை விஜயமல்லையாவின் சான்ரிமோ ஓய்வு விடுதிக்கும், 100 முதல் 200 மீ. பரப்பளவிலான சிறந்த தோட்டத்துக்கான விருது செட்டிநாட்டு அரசி ராணி மெய்யம்மை ஆச்சிக்கும், 500 முதல் 100 ச.மீருக்கான பிரிவில் உதகை நகராட்சிக்கும், 50 ச.மீக்கு குறைந்த சிறந்த தோட்டத்திற்கான பரிசு ரஞ்சித் குருவில்லாவுக்கும் வழங்கப்பட்டது.

உதகை மற்றும் குன்னூர் பகுதிகளுக்கான கிச்சன் கார்டன் முதல் பிரிவில் முதல் பரிசு உதகை விவசாயி இ.கிருஷ்ணப்பாவுக்கும், இரண்டாவது பரிசு பிருந்தாவன் பப்ளிக் பள்ளிக்கும், இரண்டாவது பிரிவில் உதகை சான்ரிமோ ஓய்வு விடுதிக்கு முதல் பரிசும், கேட்வே நிறுவனத்துக்கு இரண்டாம் பரிசும் வழங்கப்பட்டன. 3வது பிரிவில் முதல் பரிசு ராணி மெய்யம்மை ஆச்சிக்கும், இரண்டாவது பரிசு உதகையைச் சேர்ந்த ஜே.சிவலிங்கம் என்பவருக்கும் வழங்கப்பட்டன.

கோத்தகிரி பகுதிக்கான கிச்சன் கார்டனுக்கான முதல் பிரிவில் முதல் பரிசு கோத்தகிரியை சேர்ந்த கே.சண்முகத்துக்கும், இரண்டாம் பரிசு காத்தகட்டியை சேர்ந்த எம்.சிவராஜுக்கும் வழங்கப்பட்டது. இரண்டாவது பிரிவில் முதல் பரிசு நெடுகுளாவை சேர்ந்த நந்தகுமாருக்கு முதல் பரிசும், கன்னேரியைச் சேர்ந்த பொக்கனுக்கு இரண்டாம் பரிசும், 3வது பிரிவில் முதல் பரிசு மிளிதேன் கிராமத்தை சேர்ந்த அருணா நந்தகுமாருக்கு முதல் பரிசும், காத்தகட்டியைச் சேர்ந்த கே.சி.சண்முகத்துக்கு இரண்டாம் பரிசும் வழங்கப்பட்டது.

4 வது பிரிவில் முதல் பரிசு கேர்கொம்பையைச் சேர்ந்த ராஜேந்திரனுக்கு முதல் பரிசும், கோதகிரியைச் சேர்ந்த ஹாலம்மாளுக்கு இரண்டாம் பரிசும், 5-வது பிரிவில் கேர்கொம்பையை சேர்ந்த பி.கண்ணனுக்கு முதல் பரிசும், கோத்தகிரியைச் சேர்ந்த கே.பி.பெள்ளிக்கு இரண்டாம் பரிசும், 6வது பிரிவில் மிளிதேனை சேர்ந்த எஸ்.கிருஷ்ணனுக்கு முதல் பரிசும், சுளிகூடுவை சேர்ந்த சிவாவுக்கு இரண்டாம் பரிசும் வழங்கப்பட்டன.

பரிசளிப்பு விழா நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் பாஸ்கரபாண்டியன், தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் கதிரவன், துணை இயக்குநர் என்.மணி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**கோத்தகிரியில் கோலாகலமாக துவங்கியது காய்கறி கண்காட்சி**

**கோத்தகிரி,**

கோத்தகிரியில் உள்ள நேரு பூங்காவில் சனிக்கிழமை கோடை விழா, 7-வது காய்கறி கண்காட்சி கோலாகலமாக சனிக்கிழமை துவங்கியது.

இரு தினங்கள் நடைபெறும் இந்தக் கண்காட்சி துவக்க நிகழ்ச்சிக்கு ஆட்சியர் பி.சங்கர் தலைமை வகித்தார். மலைப் பகுதி மேம்பாட்டு திட்ட இயக்குநர் ஸ்ரீநிவாச ரெட்டி முன்னிலை வகித்தார்.

சுற்றுலாத் துறை மேலாண்மை இயக்குநர் இரா.கண்ணன் கோடைவிழா, காய்கறி கண்காட்சியை துவக்கி வைத்தார்.

பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த தோட்டக்கலைத் துறையினர், பல்வேறு வடிவங்களாலான காய்கறிகளின் வடிவங்களை காட்சிக்கு வைத்திருந்தனர்.

இந் நிகழ்ச்சியில் தோட்டக்கலைத் துறை மாவட்ட இணை இயக்குநர் கதிரவன், துணை இயக்குநர் மணி, உதவி இயக்குநர் உமாராணி, குன்னூர் கோட்டாட்சியர் செல்வராஜ், கோத்தகிரி வட்டாட்சியர் சி.ராம்குமார், கோத்தகிரி பேரூராட்சி செயல் அலுவலர் நா.பழனி, சுகாதார ஆய்வாளர் கண்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 42.16 அடி

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை நிலவரப்படி 42.16 அடியாக இருந்தது. அணைக்கு 414 கனஅடி நீர் வந்தது.

அணையில் இருந்து ஆற்றில் 800 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர்இருப்பு 2.82 டி.எம்.சி.

## கொங்கணாபுரத்தில் ரூ. 50 லட்சம் பருத்தி ஏலம்

**எடப்பாடி,**

கொங்கணாபுரம் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் 2,520 பருத்தி மூட்டைகள் ரூ.50 லட்சத்துக்கு சனிக்கிழமை ஏலம் போனது.

திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கிளை கொங்கணாபுரத்தில் உள்ளது.

இந்தச் சங்கத்துக்கு பிற சங்கங்களை விட அதிகளவு பருத்தி விற்பனைக்கு கொண்டு வரப்படும். விற்பனைக்கு வரும் தரமான பருத்தியை வாங்குவதற்காக கோவை அன்னூர், அவினாசி, சேலம், திருப்பூர், ஊத்தங்கரை, கோவில்பட்டி, விருதுநகர், தேனி, திண்டுக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி போன்ற பகுதிகளிலிருந்து ஏராளமான வியாபாரிகள் வருகின்றனர்.

இந்த விற்பனைச் சங்கத்தில் சனிக்கிழமை நடைபெற்ற பருத்தி ஏலத்தில் 2,520 பருத்தி மூட்டைகள் ஏலத்துக்கு கொண்டு வரப்பட்டன.

இதில், பிடி முதல் ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 5,410 முதல் ரூ. 5,950 வரையும், இரண்டாம் தர பருத்தி ரூ. 4,830 முதல் ரூ. 5,340 வரையும், டிசிஎச் முதல் ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 6,520 முதல் ரூ.7,010 வரையும், இரண்டாம் ரக பருத்தி ரூ.5,920 முதல் ரூ. 6,550 வரையும் ஏலம் போயின. மொத்தம், ரூ. 50.10 லட்சத்துக்கு பருத்தி ஏலம் போனது.

## மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறப்பு குறைப்பு

**மேட்டூர்,**

மேட்டூர் அணையிலிருந்து குடிநீர் தேவைக்காக திறக்கப்படும் நீரின் அளவு நொடிக்கு 1,000 கன அடியாக சனிக்கிழமை குறைக்கப்பட்டது.

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறப்பது நிறுத்தப்பட்டதும், குடிநீர் தேவைக்காக அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படும்.

கடந்த 17-ஆம் தேதி மேட்டூர் அணையிலிருந்து நொடிக்கு 6 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. அணையின் நீர்மட்டம் மளமளவென குறைந்ததால் கடந்த 25-ஆம் தேதி தண்ணீர் திறப்பு நொடிக்கு 3 ஆயிரம் கன அடியாகக் குறைக்கப்பட்டது. தொடர்ந்து, சனிக்கிழமை காலை 8 மணி முதல் குடிநீருக்கு திறக்கப்படும் நீரின் அளவு நொடிக்கு 3 ஆயிரம் கன அடியிலிருந்து ஆயிரம் கன அடியாகக் குறைக்கப்பட்டது. சனிக்கிழமை காலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 32.70 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 975 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. நீர் இருப்பு 8.64 டி.எம்.சியாக இருந்தது.

## திருச்செங்கோட்டில் ரூ. 1.75 கோடிக்கு மஞ்சள் விற்பனை

**திருச்செங்கோடு,**

திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ.1.75 கோடிக்கு மஞ்சள் விற்பனையானது. பனங்காளி ரக மஞ்சள் குவிண்டால் ரூ.14 ஆயிரத்துக்கு விலை போனது.

ஆத்தூர், கெங்கவல்லி, கூகையூர், கள்ளக்குறிச்சி, பொம்மிடி, அரூர், ஜேடர்பாளையம், பரமத்திவேலூர், நாமக்கல், மேட்டூர், பூலாம்பட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் சனிக்கிழமை சுமார் 3500 மூட்டை மஞ்சளைக் கொண்டு வந்திருந்தனர்.

இந்த மஞ்சளை கொள்முதல் செய்ய ஈரோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, சேலம் ஆகிய ஊர்களிலிருந்து 35-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் வந்திருந்தனர். ஏலம் மூலம் ரூ. 1.75 கோடிக்கு மஞ்சள் விற்பனையானது.

விரலி ரகம் குவிண்டாலுக்கு ரூ.7200 முதல் ரூ.9009 வரை விற்பனையானது. கிழங்கு ரகம் ரூ. 6000 முதல் ரூ. 7700 வரை விலை போனது. பனங்காளி ரகத்துக்கு ரூ. 9500 முதல் ரூ. 14100 வரை விலை கிடைத்தது. பனங்காளி ரகத்துக்கு அதிக விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்ததாக கூட்டுறவுச் சங்கத்தின் மேலாண் இயக்குநர் லோகநாதன் தெரிவித்தார்.

**நாமக்கல், ராசிபுரத்தில் மழை**

**நாமக்கல்,**

நாமக்கல் மாவட்டத்தில் நாமக்கல், ராசிபுரம், புதுசத்திரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சனிக்கிழமை மாலை திடீரென பலத்த மழை பெய்தது.

கடும் வெயிலில் அவதிப்பட்டு வந்த மக்களுக்கு இந்த மழை குளிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதனால், அவர்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

நாமக்கல், ராசிபுரம், புதுசத்திரம் உள்ளிட்ட பகுதிகளில் பெய்த மழையால் நகரின் தாழ்வான பகுதிகளில் மழை நீர் வெள்ளம் போல பெருக்கெடுத்து ஓடியது.

ஆங்காங்கே சாலைகளில் மழை நீர் தேங்கியது.

**பேராவூரணியில் மழை:மக்கள் மகிழ்ச்சி**

**பேராவூரணி,**

பேராவூரணியில் ஞாயிற்றுக்கிழமை மதியம் சுமார் அரை மணிநேரம் மழை பெய்ததால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

பேராவூரணி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கடந்த பல மாதங்களாக மழை இல்லாமல், ஏரி, குளங்கள் வறண்டு கிடந்தன. கால்நடைகளுக்கு தண்ணீர் இல்லாமலும், ஆழ்குழாய் கிணறுகள் நீர்மட்டம் குறைந்து குடிநீர் பிரச்னையும் ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை பெய்த மழையால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

பட்டுக்கோட்டையில்...: தமிழகத்தில் அக்னி நட்சத்திரம் எனப்படும் கத்திரி வெயில் தொடங்கிய ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் பட்டுக்கோட்டையில் சுமார் அரை மணி நேரத்துக்கும் அதிகமாக கோடை மழை பெய்தது. சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்தது. தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியது. இந்த மழையால் இப்பகுதியில் நிலவி வந்த கடும் வெப்பத்தின் தாக்கம் ஓரளவு குறைந்தது.

**பட்டுக்கோட்டையில் மழை**

**பட்டுக்கோட்டை,**

பட்டுக்கோட்டையில் சனிக்கிழமை பிற்பகல் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது.

தொடர்ந்து பலமுறை இடி சப்தம் கேட்டது. மாலையில் சிறிது நேரம் சாரல் மழை பெய்தது. இருப்பினும், வெப்பத்தின் தாக்கம் குறையவில்லை.

பொன்னமராவதியில்...

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி பகுதியில் சனிக்கிழமை மாலை பெய்த மழை பொதுமக்கள் மற்றும் விவசாயிகளை மகிழ்ச்சியடையச் செய்தது. புதன், வியாழக்கிழமைகளில் பெய்த சாரல் மழை சற்றே குளிர்வித்தது. இந்த நிலையில், சனிக்கிழமை மாலை சுமார் 1 மணிநேரம் கனமழை பெய்தது.

**மன்னார்குடியில் கொட்டி தீர்த்த மழை!**

**மன்னார்குடி,**

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் சனிக்கிழமை பிற்பகலில் சுமார் 2 மணி நேரம் பலத்த மழை பெய்தது.

மன்னார்குடியில் ஏப்ரல் மாதத்தில் நாளுக்கு நாள் அதிகரித்து வந்த வெயிலின் தாக்கத்தால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியது. பெரும்பாலானோர் வீட்டிலேயே இருந்தனர்.

இந்நிலையில், ஏப்ரல் 30-ம் தேதி பிற்பகல் 1 மணிக்கு தொடங்கி ஒருமணி நேரம் மழை பெய்தது. இதனால், வெயிலின் தாக்கம் குறைந்திருந்தது. இதனால் மக்கள்

மகிழ்ச்சி அடைந்தனர். இதைத் தொடர்ந்து வந்த 2 நாள்களும் வெயிலின் தாக்கம் அதிகரித்தது. இதனால், ஞாயிற்றுக்கிழமை தொடங்கும் அக்னி நட்சத்திர வெயிலை சமாளிப்பது குறித்து மக்கள் கவலையடைந்தனர். இந்நிலையில், சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு மேகமூட்டம் ஏற்பட்டு, சிறிதுநேரத்தில் லேசான தூறலுடன் தொடங்கிய மழை பலத்த மழையாக மாறி சுமார் 2 மணி நேரம் கொட்டி தீர்த்தது.

இதனால், நகரின் தாழ்வான இடங்களில் மழைநீர் ஓடைப் போல ஓடியது.

வாகனங்களில் சென்றவர்கள் முகப்பு விளக்கை எரியவிட்டு சென்றனர்.நகரில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்துவந்த நிலலையில், மழையால் நிலத்தடி நீர்மட்டம் உயர வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதுபோல் அடிக்கடி மழை பெய்தால் அக்னி வெயிலின் தாக்கத்திலிருந்து தப்பிக்கலாம் என பொதுமக்கள் தெரிவித்தனர்.

## உதவி வேளாண் துறை அலுவலர் பணியிடம்: பதிவைச் சரிபார்க்கலாம்

**கரூர்,**

வேளாண் துறையில் உதவி வேளாண்துறை அலுவலர் பணியிடம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் இரா. துரைராஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் பதிவாளரால் (பொ) உதவி வேளாண் பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

இதற்கு விவசாய படிப்பில் இரண்டு ஆண்டு பட்டயப் படிப்போ அல்லது தோட்டக்கலையில் இரண்டு ஆண்டு பட்டயப் படிப்போ படித்திருக்க வேண்டும்.

இப்பணியிடங்களுக்கு கரூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பதிவுதாரர்கள் பரிந்துரைக்கப்பட உள்ளனர். எனவே பதிவுதாரர்கள் தங்களது அனைத்துக் கல்விச் சான்றுகள், வேலைவாய்ப்பு அடையாள அட்டை, சாதிச்சான்று, குடும்ப அடையாள அட்டை ஆகியவற்றுடன் வரும் 8-ம் தேதிக்குள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்துக்கு வர வேண்டும்.

## குமரி மாவட்டத்தில் பரவலாக மழை: கொட்டாரத்தில் 67.4 மி.மீ. பதிவானது

**நாகர்கோவில்,**

குமரி மாவட்டத்தில் பரவலாக நல்ல மழை பெய்தது. அதிகபட்சமாக கொட்டாரத்தில் 67.4 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. குமரி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக மழை பெய்து வருகிறது. ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த மழையளவு விவரம்: பேச்சிப்பாறை 3.8 மி.மீ., பெருஞ்சாணி 5.4 மி.மீ., சிற்றாறு (1) 14.1 மி.மீ., சிற்றாறு (2) 27.4 மி.மீ., பொய்கை 4.7 மி.மீ., மாம்பழத்துறையாறு 33 மி.மீ., இரணியல் 2 மி.மீ., ஆனைக்கிடங்கு 32 மி.மீ., குளச்சல் 4 மி.மீ., குருந்தன்கோடு 5.2 மி.மீ., அடையாமடை 5 மி.மீ., கோழிப்போர்விளை 10 மி.மீ., திருவட்டாறு 16 மி.மீ., முள்ளங்கினாவிளை 18 மி.மீ., புத்தன்அணை 5 மி.மீ., திற்பரப்பு 64 மி.மீ., நாகர்கோவில் 41.2 மி.மீ., பூதப்பாண்டி 23.5 மி.மீ., சுருளோடு 30 மி.மீ., கன்னிமார் 10.5 மி.மீ., ஆரல்வாய்மொழி 4.7 மி.மீ., பாலமோர் 3.1 மி.மீ., மயிலாடி 65.2 மி.மீ., கொட்டாரம் 67.4 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. களியக்காவிளை சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் பலத்த மழை பெய்தது. இதனால் குளிர்ச்சியான காலநிலை நிலவியது.

நீர்வரத்து: அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் மழை பெய்ததால் பேச்சிப்பாறை அணைக்கு 169 கனஅடியும், பெருஞ்சாணி அணைக்கு 52 கனஅடியும், சிற்றாறு 1 அணைக்கு 66 கனஅடியும், சிற்றாறு 2 அணைக்கு 64 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

## மழையுடன் தொடங்கிய கத்திரிவெயில்

**தென்காசி,**

தென்காசியில் ஞாயிற்றுக்கிழமை கனமழை பெய்தது. இதனால் கத்திரி வெயிலின் தாக்கம் வெகுவாக குறைந்து குளிர்ந்த காற்று வீசியது.

கத்திரிவெயில் என்றழைக்கப்படும் அக்னிநட்சத்திர வெயில் ஞாயிற்றுக்கிழமை தொடங்கி வரும் 27 ஆம் தேதி வரை நீடிக்கும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் தென்காசி மற்றும் குற்றாலம் பகுதியில் காலையில் வெயிலும் பிற்பகலில் வெயிலின் தாக்கம் குறைந்தும், அவ்வப்போது மழையும் பெய்து

வருகிறது. இதனால் பொதுமக்கள் வெயிலின் தாக்கத்திலிருந்து தப்பித்து வந்தனர். இந்நிலையில் கத்திரிவெயில் தொடக்க நாளான ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் சுமார் 1 மணிநேரத்துக்கும் மேலாக பலத்த மழை பெய்தது. இதை தொடர்ந்து குளிர்ந்த காற்று வீசியது. இதனால் பொதுமக்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்தனர்.

## அக்னி வெப்பத்தை தணித்த மழை!

**கடலூர்,**

கடலூர் மாவட்டத்தில் கடலூர், பண்ருட்டி, விருத்தாசலம் நகரங்களில் ஞாயிற்றுக்கிழமை காலை திடீரென மழை பெய்தது. இதனால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். கடலூரில் கடந்த சில நாள்களாக வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. அக்னி நட்சத்திரம் தொடங்குவதற்கு முன்பே கடலூரில் அதிகபட்சமாக 100 டிகிரி வரை வெயில் கொளுத்தியது. இதனால் பகல் நேரங்களில் பொதுமக்கள் வீட்டை விட்டு வெளியே வருவதற்கே அச்சமடைந்தனர். இரவிலும் வெப்பத்தின் தாக்கம் அதிகளவில் இருந்து வருகிறது.

கத்திரி வெயில் எனப்படும் அக்னி நட்சத்திரம் ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது. இதனால் வெயிலின் தாக்கம் தற்போது இருப்பதை விட அதிகமாக இருக்கும் என்று மக்கள் அச்சத்தில் இருந்தனர். இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை காலை 6.45 மணி முதல் 7 மணி வரை மழை பெய்தது. கடலூர் நகரில் 17.3 மில்லி மீட்டர் மழை பதிவானது. மழை நின்ற பிறகும் தொடர்ந்து மேகமூட்டம் காணப்பட்டது. இதனால் வெயிலின் தாக்கத்தில் இருந்து மக்கள் நிம்மதி அடைந்தனர்.

பண்ருட்டி: சுனாமி, தானே புயல் போன்ற இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்ட பண்ருட்டி நகரில் சில ஆண்டுகளாக வெப்பத்தின் தாக்கம் அதிகரித்தே காணப்படுகிறது. இந்நிலையில், அக்னி நட்சத்திரத்தின் தொடக்க நாளான ஞாயிற்றுக்கிழமை பண்ருட்டியில் காலை கருமேகங்கள் சூழ்ந்து குளிர்ந்த காற்றுடன் லேசான மழை பெய்தது. ஒரு சில நிமிடங்கள் பெய்த மழையைத் தொடர்ந்து வெயில் சுட்டெரிக்கத் தொடங்கியது.

விருத்தாசலம்: விருத்தாசலம் பகுதியில் வெயிலின் கடுமை வாட்டி வந்த நிலையில், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகி வந்தனர். இந்நிலையில், விருத்தாசலம் பகுதியில் சனிக்கிழமை வானம் மேகமூட்டத்துடனும்,

வெயிலின் தாக்கம் குறைவாகவும் இருந்து வந்தது. இதனைத்தொடர்ந்து, ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியிலிருந்து 1 மணி நேரம் மழை பெய்தது. மழை பெய்து முடித்த சிறிது நேரத்திலேயே வெயிலின் தாக்கம் சற்று அதிகரிக்கத் தொடங்கியது. பின்னர் 11.30 மணியளவில் மீண்டும் மழை பெய்தது. இதனையடுத்து, தொடர்ச்சியாக வானம் மேகமூட்டத்துடனேயே காணப்பட்டது. அவ்வப்போது தூரல் விழுந்துகொண்டிருந்ததால் விருத்தாசலம் நகரில் நாள் முழுவதும் குளிர்ச்சி நிலவியது.

விவசாயிகள் ஏமாற்றம்: விருத்தாசலம் நகரத்தில் பரவலாக பெய்த மழை விருத்தாசலம் சுற்றுவட்டாரத்திலுள்ள ஒரு சில பகுதிகளைத் தவிர மற்ற பகுதிகளில் பெய்யாததால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்தனர்.

**தினமலர்**

**இன்றைய வேளாண் செய்திகள்**

**அக்னி நட்சத்திரம் துவங்கிய நாளில் மழை : தமிழகத்தின் பல பகுதிகள் குளிர்ந்தன**

**சென்னை**: ""தென் தமிழகத்தின் அனேக இடங்களிலும், வட தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், இன்னும் இரு தினங்களுக்கு மழை நீடிக்கும்; சில இடங்களில் கன மழைக்கு வாய்ப்புள்ளது," என, சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர், ரமணன் தெரிவித்துள்ளார். தமிழகத்தில், கோடை வெப்பம், வடக்கு பகுதியை தாக்கி வருகிறது. நேற்று முதல், வாட்டும் வெப்பம் கொண்ட அக்னி நட்சத்திர நாள் ஆரம்பம். இது இனி மூன்று வாரங்களுக்கு தொடரும். இந்த நிலையில், தென் தமிழகம், கோடை மழையால் குளிர்ந்துள்ளது. வெப்பச் சலனம் மற்றும் காற்று மேலடுக்கு சுழற்சி காரணமாக, கடந்த ஒரு மாதமாகவே, கன்னியாகுமரி, நெல்லை, திண்டுக்கல் பகுதிகளில் ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. நீலகிரியில், அவ்வப்போது ஆலங்கட்டி மழையும், கனமழையும் பெய்து வருகிறது. தற்போது வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு பகுதியின் காரணமாக, தென்

தமிழகம் மட்டுமின்றி, வட தமிழகத்திலும் மழை பெய்ய துவங்கியுள்ளது. மழை குறித்து, சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர், ரமணன் கூறியதாவது: தென்மேற்கு வங்கக்கடலில், உருவாகிய காற்றழுத்த தாழ்வு நிலை, காற்றழுத்த தாழ்வு பகுதியாக மாறி, இலங்கை மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில், நிலை கொண்டுள்ளது. அடுத்த, 48 மணிநேரத்தில், இது, மேற்கு நோக்கி நகரும் என, எதிர்பார்க்கப்படுகிறது.இதன் காரணமாக, தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. மேலும், இன்னும் மூன்று நாட்களுக்கு, தென் தமிழகத்தின் அனேக இடங்களிலும், வட தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும் மழை நீடிக்கும்; சில இடங்களில், கனமழையும் பெய்யக் கூடும்.அதன்பின், தரைக்காற்றில் ஈரப்பதம் குறைந்து, வறட்சியான காற்றே வீசும்.

சென்னையை பொறுத்தவரை, வானம் மேக மூட்டத்துடன் காணப்படும்; நகரின் சில பகுதிகளில் மழை பெய்யும்.இவ்வாறு, அவர் கூறினார்.

ஆனால், நேற்று காலை முதலே, சென்னை, கடலூர் உள்ளிட்ட தமிழகத்தின் பல பகுதிகள் மற்றும் புதுச்சேரியில் ஆங்காங்கே மழை பெய்து வருகிறது.சென்னையில் குறிப்பாக, கிண்டி, சிட்லபாக்கம், திருவல்லிக்கேணி, போரூர், வளசரவாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் அரை மணி நேரத்திற்கும் மேலாக மழை பெய்தது. இதன் காரணமாக, கடந்த சில தினங்களாக இருந்த வெயிலின் தாக்கம் நேற்று சற்றே குறைந்தது.

## வறட்சி பாதிப்பு தகவல் : வேளாண் துறை தீவிரம்

மாநிலம் முழுவதும் ஏற்பட்டுள்ள வறட்சி பாதிப்பு குறித்து, தகவல் சேகரிக்கும் பணியில், வேளாண் துறையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். தமிழகத்தில், இரண்டு ஆண்டுகளாக பருவ மழை போதுமான அளவில் பெய்யவில்லை. பல மாவட்டங்களில் வறட்சி பாதிப்பு அதிகரித்துள்ளது; நிலத்தடி நீருக்கும் கடும்பற்றாக்குறை உள்ளது. கடந்த ஆண்டு வறட்சி பாதிப்பு ஏற்பட்ட போது, அரசு மூலம், விவசாயிகளுக்கு இழப்பீடு அறிவிக்கப்பட்டது. அவசர கதியில், பயிர் காப்பீடு செய்யப்பட்டது. இது, விவசாயிகளின் நஷ்டத்தை சமாளிக்க ஓரளவுக்கு உதவியது. தற்போது, மீண்டும் வறட்சி ஏற்பட்டுள்ளதால், போதிய வருமானமின்றி விவசாயிகள் தவித்து வருகின்றனர். கடந்த ஆண்டை போலவே இந்த ஆண்டும், அரசு தரப்பில், நிவாரணம் அறிவிக்க வேண்டும் என எதிர்பார்?க்கின்றனர். கடந்த

ஆண்டு, வறட்சி குறித்த விவரங்களை, முதலில், வேளாண் துறையினர் சேகரித்து அரசுக்கு அனுப்பினர். மாவட்ட நிர்வாகம், வருவாய்துறை மூலம், அவை சரி பார்க்கப்பட்டு நிவாரணம் வழங்கப்பட்டது. அதே போல், தற்போதும், வறட்சி குறித்த விவரங்களை சேகரிக்கும் பணியில் வேளாண் துறையினர் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

சாகுபடி பாதித்துள்ள நில விவரம்; சாகுபடி செய்யப்பட்ட பயிர்கள்; நிலத்தின் உரிமையாளர் பெயர்; சாகுபடி செய்த விவசாயிகளின் பெயர் உள்ளிட்ட பல தகவல்கள் இதில் இடம் பெற்று உள்ளதாக தெரிகிறது.

**நெல்லையில் தூறல் : குற்றாலத்தில் சாரல்**




**திருநெல்வேலி**: நெல்லையில் நேற்றும் மழை பெய்தது. குற்றால அருவிகளிலும் தண்ணீர் கொட்டியது. திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக கோடை மழை பெய்து வருகிறது.

நேற்றும் பகலில், மாவட்டம் முழுவதும் வெயிலின் தாக்கம் தெரியவில்லை. மாலையில் லேசான தூறல் மழை பெய்தது. தென்காசி, குற்றாலம் பகுதிகளில் சாரல் மழை பெய்தது.

இதனால், அருவிகளில் குறைவான அளவு தண்ணீர் விழுகிறது. இன்னும் 2 தினங்களுக்கு மழை இருக்கும் என, வானிலைஆய்வு மையம் அறிவித்து இருப்பதால், தென்மாவட்டங்களில் "அக்னி நட்சத்திர' வெயிலின் பாதிப்பு குறைய வாய்ப்புள்ளது.

## சென்னையில் இன்று அதிகாலை கனமழை

**சென்னை**: சென்னையில் இன்று அதிகாலை கிண்டி, மீனம்பாக்கம் தேனாம்பேட்டை, எழும்பூர் நுங்கம்பாக்கம், அண்ணாசலை மற்றும் வேளச்சேரி உள்ளிட்ட பகுதிகளில் பலபகுதிகளில் கனமழை பொழிகிறது,இதுதவிர சிதம்பரம், காரைக்கால் ஆகிய பகுதிகளில் பரவலாக மழை பெய்கிறது.குறைந்த கற்றழுத்தம் தாழ்வு பகுதி காரணமாக இம்மழை பெய்வதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது. மழை மேலும் 3 நாட்களுக்கு நீடிக்கும் என தெரிகிறது.

## தமிழகத்தில் பரவலாக கன மழை

**சென்னை**:தமிழகத்தில் பரவலாக மழை பெய்துவருகிறது.சென்னை, கும்பகோணம், திருவிடைமருதூர், வலங்கை மான், சீர்காழி,சிதம்பரம் உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளில் பரவலாக காற்றுடன் கூடிய கன மழை பெய்துவருகிறது.

## புளிச்சை கீரைக்கு வரவேற்பு ஆர்வமுடன் பயிரிடும் விவசாயிகள்

**கும்மிடிப்பூண்டி**: சந்தையில் அதிக வரவேற்பு கிடைத்திருப்பதால், குறைந்த செலவில், அதிக லாபம் தரும் புளிச்சை கீரையை, விவசாயிகள் ஆர்வமுடன் பயிரிடுகின்றனர். கால்சியம், பாஸ்பரஸ், வைட்டமின் ஏ.பி.சி., இரும்பு சத்துகள் நிறைந்த புளிச்சை கீரை, இதயம், சிறுநீரகம், கல்லீரல், வாதம் போன்ற நோய்களுக்கு சிறந்த மருத்துவ உணவாக பயன்படுகிறது.

அதன் மருத்துவ குணம் அறிந்ததால், நகர்ப்புறத்தில் புளிச்சை கீரைக்கு அதிக வரவேற்பு கிடைத்துள்ளது. இதனால், கும்மிடிப்பூண்டி மற்றும் அதை சுற்றியுள்ள கிராமப்புறங்களில், அதிக அளவில் தற்போது, புளிச்சை கீரை பயிரிடப்படுகிறது. ஆந்திராவில் இருந்து, உயர்ரக விதை வாங்கி, ஏக்கருக்கு, 50 கிலோ விதை தூவுகின்றனர். தை மாதம் விதைத்து, ஆடி மாதம் வரை ஐந்து முறை நன்கு விளைந்த கீரையை வெட்டி கட்டு போடுகின்றனர்.

ஒவ்வொரு விளைச்சலுக்கும், ஐந்து முறை தண்ணீர் பாய்ச்சுகின்றனர்.

இதுகுறித்து, துராபள்ளம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி சம்பத் கூறுகையில், 'ஒரு ஏக்கருக்கு ஒரு விளைச்சலுக்கு, 20 ஆயிரம் கட்டு கீரை கிடைக்கிறது. கோயம்பேடு

சந்தையில் அதிக வரவேற்பு கிடைத்திருப்பதால், குறைந்த செலவில் அதிக லாபம் தரும், புளிச்சை கீரையை பயிரிட்டு வருகிறோம்' என, தெரிவித்தார்.

## குளம், குட்டைகளுக்கு திறக்கப்பட்ட தண்ணீர் நிறுத்தம்; அணையில் இருப்பு வைத்து வழங்க முடிவு




**திருப்பூர்** : திருப்பூர், பல்லடம், காங்கயம் பகுதிகளில் உள்ள குட்டைகளுக்கு வருவதற்கு முன்பே, தண்ணீர் நிறுத்தப்பட்டதால், பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். அணையில் போதுமான அளவு இருப்பு வைத்து, அதன்பின்பே, தண்ணீர் திறக்கப்படும் என பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். கடந்த இரண்டு ஆண்டுகளாக, பருவ மழை பொய்த்ததால், திருப்பூர் மாவட்டம் முழுவதும் கடும் வறட்சி நிலை நீடித்து வருகிறது. விவசாய சாகுபடியும் பாதித்துள்ளதோடு, தென்னை உள்ளிட்ட நிலைப்பயிர்களும் காய்ந்து வருகின்றன. குடிநீர் தட்டுப் பாடும், கால்நடைகளுக்கு தண்ணீர் இல்லாத நிலையும் ஏற்பட்டுள்ளது. வறட்சியை ஓரளவு சமாளிக்க, குளம், குட்டைகளுக்கு தண்ணீர் வழங்க வேண்டும் என குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மாவட்ட நிர்வாகம் தமிழக அரசுக்கு பரிந்துரைத்தது. அதையேற்று, திருமூர்த்தி அணையில் இருந்து 500 மில்லியன் கன அடி தண்ணீர் வழங்க அரசு உத்தரவிட்டது. அதன் அடிப்படையில், ஏப்., 15 முதல், குளம், குட்டைகளுக்கு பிரதான கால்வாய் மூலம் தண்ணீர் வழங்கும் பணி துவங்கியது. தொகுப்பு அணைகளில் நீர் இருப்பு குறைவாக இருந்ததால், காண்டூர் கால்வாயில் தண்ணீர் வரத்து குறைந்தளவே காணப்பட்டது. இதனால், ஆயிரம் கன அடி நீர் கொள்ளளவு கொண்ட பிரதான கால்வாயில், வினாடிக்கு 300 கன அடி தண்ணீர் மட்டுமே திறக்கப்பட்டது. திறக்கப்பட்ட

தண்ணீரும், கடும் வறட்சி, தண்ணீர் திருட்டு, நீர் ஆவியாதல் அதிகரிப்பு ஆகிய காரணங்களால், வந்து சேரவில்லை. பிரதான கால்வாயின் மொத்த நீளம் 124 கிலோ மீட்டரில், 75வது கி.மீ., வரை மட்டுமே தண்ணீர் எட்டிப்பார்த்தது. வினாடிக்கு, 300 கன அடி நீர் திறந்தாலும், 240 கன அடி நீர் வீணாகி, குட்டைகளுக்கு 60 கன அடி நீர் மட்டுமே வந்து சேர்ந்தது. அதிகளவு வறட்சியால் பாதித்த பல்லடம், பொங்கலூர், திருப்பூர், காங்கயம், வெள்ளக்கோவில் பகுதிகளுக்கு இந்நாள் வரை தண்ணீர் கிடைக்கவில்லை. பல்லடத்துக்கு கூட தண்ணீர் வராததால், பல இடங்களில் விவசாயிகளும், பொதுமக்களும் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர். இந்நிலையில், திடீரென, நேற்று தண்ணீர் நிறுத்தப்பட்டதால், இப்பகுதி மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். கோடையை சமாளிக்க திறக்கப்பட்ட தண்ணீர், இப்பகுதி மக்களுக்கு கானல் நீராக மாறியுள்ளது. திருமூர்த்தி அணையில் மொத்தமுள்ள 60 அடியில், 12.29 அடி மட்டுமே நீர் இருப்பு உள்ளது. அணைக்கு வினாடிக்கு, 178 கன அடி நீர் வரத்தாக உள்ளது. போதிய அழுத்தம் இல்லாமல், தண்ணீர் திறந்து விட்டால், விரையம் அதிகரிக்கும். அதனால், அணையில் நீர் இருப்பு செய்த பிறகு திறந்து விடப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பி.ஏ.பி., கண்காணிப்பு பொறியாளர் இளங்கோவனிடம் கேட்டபோது, ""குறைந்தளவு தண்ணீர் திறப்பதால், விரையம் அதிகரிக்கிறது. அணையில் நீர் இருப்பு செய்த பிறகு, தண்ணீர் திறக்கப்படும். அடுத்த வாரம், கடை மடை பகுதி வரை கட்டாயம் தண்ணீர் வழங்கப்படும்," என்றார்.

## மணிமுக்தா அணையில் மீன் விற்பனை துவக்கம்

**தியாகதுருகம்**: மணிமுக்தா அணையில் மீன் விற்பனை துவங்கியுள்ள நிலையில் எதிர்பார்த்த அளவு மீன்கள் வளராததால் குத்தகை எடுத்தவர்கள் கவலையடைந்துள்ளனர்.

கள்ளக்குறிச்சி அடுத்த சூளாங்குறிச்சி அருகே மணிமுக்தா ஆற்றின் மீது அணை கட்டப்பட்டுள்ளது. கடந்த இரு ஆண்டாக மழை குறைந்ததால் அணை நிரம்பவில்லை. கடந்த பருவமழை காலத்தில் 21 அடி மட்டும் அணைக்கு தண்ணீர் கிடைத்தது. பாசனத்திற்கு தண்ணீர் திறக்க முடியவில்லை.

ஆண்டுதோறும் மீன்வளத்துறை மூலம் மீன் வளர்த்து விற்கின்றனர். இது கடந்த சிலஆண்டுகளாக தனியாருக்கு குத்தகைக்கு விட்டு வளர்க்கப்படுகிறது. கடந்த இரு ஆண்டுகளாக அணையில் குறைந்த தண்ணீர் இருந்ததால் மீன் வளர்ப்பு கடுமையாக பாதித்தது. எதிர்பார்த்த அளவுக்கு மீன்கள் வளராமல் நஷ்டம் ஏற்பட்டது. கடந்த நவ., மாதம் 8 லட்சம் மீன் குஞ்சுகள் விடப்பட்டன.

அணை நிரம்பாததால் இவைகளின் வளர்ச்சி பாதித்தது. தற்போது அணையில் 18 அடி தண்ணீர் உள்ள நிலையில் கோடை வெப்பத்தின் காரணமாக வேகமாக வற்றி வருகிறது. வேறு வழியின்றி மீன்களை பிடித்து விற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எதிர்பார்த்த அளவு மீன்கள் வளராததால் பிடித்து விற்கின்றனர். தண்ணீர் வற்றும் காலம் வரை மீன் பிடித்து விற்பனை செய்யப்படும். இவ்வாண்டு ஏரி, குளங்கள் வறண்டுள்ளதால் நல்ல தண்ணீரில் வளரும் மீன்கள் கிடைப்பது குறைந்து விட்டது. அதே நேரத்தில் விலையும் உயர்ந்தது.

கடலில் மீன்பிடிப்புக்கு தடை அமலில் உள்ளதால், அணையில் கிடைக்கும் உயிர் மீன்களுக்கு நல்ல கிராக்கி உள்ளது. விரால், கட்லா, ரோகு, கண்ணாடி கெண்டைகள் வெளி மார்க்கெட்டை விட இங்கு குறைவான விலைக்கு விற்பதால் அசைவ பிரியர்கள் பலர் அணைக்கு மீன் வாங்க படையெடுத்து வருகின்றனர். மீன் வளராமல் கடந்த 2 ஆண்டுகளாக வருவாய் பாதித்து குத்தகை எடுத்தவர்கள், இத்தொழிலை நம்பியுள்ள மீனவர் குடும்பங்களும் கவலையடைந்துள்ளனர்.

## கொங்கணாபுரத்தில் ரூ. 50 லட்சத்துக்கு பருத்தி விற்பனை

**இடைப்பாடி**: திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் கிளை, கொங்கணாபுரத்தில் உள்ளது.

இங்கு, நேற்று முன்தினம் நடந்த பருத்தி ஏலத்தில், 5,120 பருத்தி மூட்டைகள் வந்தது.

அதில், பி.டி., ரகம் முதல் ரக பருத்தி, குவிண்டால், 5,410 முதல், 5,950 ரூபாய் வரையும், இரண்டாம் தர பருத்தி, 4,830 முதல், 5,340 ரூபாய் வரையும், டி.சி.ஹெச்., முதல் ரக பருத்தி குவிண்டால், 6,520 முதல், 7,010 ரூபாய் வரையும், இரண்டாம் ரக பருத்தி, 5,920 முதல், 6,550 ரூபாய் வரையும் ஏலம் போனது. நேற்று, 50 லட்சத்து, 10 ஆயிரம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் நடந்தது.

## கோடையில் எகிறுகிறது கோழிக்கறி விலை

மீன்பிடி தடையால் கோழிக்கறியின் தேவை அதிகரித்துள்ளது. அதனால், அவற்றின் விலையும் கணிசமாக உயர்ந்துள்ளது. ஆண்டுதோறும் ஏப்., மாதம் 14ம் தேதி துவங்கி, மே மாதம் 29ம்தேதி வரைக்கும் கிழக்கு கடற்கரை பகுதிகளில் மீன்பிடி தடை அமல்படுத்தப்படுகிறது.

அதனால், அரபிக்கடலில் பிடிக்கப்படும் மீன்கள், வெளிமாநிலங்களில் இருந்து குளிர்சாதன வசதி செய்யப்பட்ட வாகனங்களில் எடுத்து வரப்பட்டு சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் விற்கப்படுகின்றன. அவற்றின் விலையும் அதிகம். அதனால், தற்போது, அசைவ பிரியர்களின் நாட்டம், கோழிக்கறியின் பக்கம் திரும்பியுள்ளது. சென்னை உள்ளிட்ட மூன்று மாவட்ட தேவைக்கும், தமிழகத்தின் நாமக்கல், ஆந்திர மாநிலம் சித்துார், கர்நாடக மாநிலம் பெங்களூரு உள்ளிட்ட இடங்களில் இருந்து கறிக்கோழிகள் எடுத்து வரப்படுகின்றன.

கடந்த வாரம், சென்னையில் ஒரு கிலோ கறிக்கோழி இறைச்சி, 150 ரூபாய்க்கு விற்கப்பட்டது. தற்போது தேவை அதிகரித்துள்ளதால், ஒரே வாரத்தில் கோழி இறைச்சி, 10 ரூபாய் கூடியுள்ளது. சென்னையில் நேற்று ஒரு கிலோ கோழி இறைச்சி, 160 ரூபாய்க்கு விற்கப்பட்டது. ஒரு சில இடங்களில், 170 ரூபாய் வரை விற்கப்பட்டது. இதுகுறித்து, கோழி இறைச்சி விற்பனையாளர் ஒருவர் கூறுகையில்,'கோடைக்காலத்தில், இறைச்சி கோழிகளை கையாள்வது கடினம். வாகனங்களில் கொண்டு வரும்போதே வெப்பம் தாங்காமல் அவை இறந்துவிடும். இதனால், மொத்த விற்பனையாளர்களுக்கு நஷ்டம் ஏற்படும். இதுமட்டுமின்றி, நாடு முழுவதும் கறிக்கோழியின் தேவை அதிகரித்து இருப்பதால், அவற்றின் விலை உயர்ந்துள்ளது. இந்த வாரத்தைவிட அடுத்த வாரம் விலை கூடுவதற்கு அதிக வாய்ப்புள்ளது' என்றார்.

## எள் வரத்து அதிகரிப்பால் கொள்முதல் விலை வீழ்ச்சி : இருப்பு வைத்து விற்பனை செய்தால் லாபம் பெறலாம் : கமிட்டி கண்காணிப்பாளர் தகவல்

**திருக்கோவிலூர்**: எள் விலை வீழ்ச்சியை சமாளிக்க விவசாயிகள் இருப்பு வைத்து விற்பனை செய்யலாம் என திருக்கோவிலூர் மார்க்கெட் கமிட்டி கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார். எள் விலை கடந்த ஏப்ரல் மாதத்தில் ஒரு மூட்டை 9 ஆயிரம்

ரூபாயை தொட்டது. எள் வரத்து முற்றிலும் இல்லாமல் போனதும், சர்வதேச சந்தையில் நல்லெண்ணெய் விலை உயர்ந்ததுமே, இதற்கு காரணம். தற்போது பருவமழை பொய்த்து போனதால் பெரும்பாலான விவசாயிகள் இரண்டாம் போக நெல் சாகுபடியை தவிர்த்து, அதிக விலை போன எள் பயிர் செய்வதில் ஆர்வம் காட்டினர். இதனால் திரும்பிய பக்கம் எல்லாம் எள் பயிரிடப்பட்டிருந்தது.

தற்போது அறுவடை சீசன் துவங்கியிருப்பதால் 9 ஆயிரமாக இருந்த ஒரு மூட்டை எள் விலை, தற்போது 6 ஆயிரம் ரூபாய் என்ற நிலைக்கு இறங்கி விட்டது. ஒரு மூட்டைக்கு 3 ஆயிரம் வரை விலை குறைந்ததால் அதிர்ச்சியடைந்த விவசாயிகள், கடந்த வாரம் திருக்கோவிலூர் மார்க்கெட் கமிட்டியில் சாலை மறியல் உள்ளிட்ட போராட்டங்களை நடத்தினர். திருக்கோவிலூர் மார்க்கெட் கமிட்டியில் சராசரியாக தினந்தோறும் 1,200 மூட்டை எள் ஏலத்திற்கு கொண்டு வரப்படுகிறது. இது மேலும் அதிகரிக்க கூடும் என்பதால் எள் விலை தொடர்ந்து வீழ்ச்சியை சந்திக்கும் அபாயம் உள்ளது. ஒட்டுமொத்த விவசாயிகள் எள் விளைச்சலுக்கு மாறியதே விலை வீழ்ச்சிக்கு காரணம். இப்பிரச்னையை விவசாயிகள் எதிர்கொள்வதற்கான வழிமுறைகள் குறித்து திருக்கோவிலூர் மார்க்கெட் கமிட்டி கண்காணிப்பாளர் செந்தில்முருகன் கூறியதாவது : எள் வரத்து அதிகரித்திருப்பதால், அதன் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இது தற்காலிகமானது. இன்னும் மூன்று மாதத்தில் விலை உயர வாய்ப்புள்ளது. விவசாயிகள் இருப்பு வைத்து விற்பனை செய்தால் அதிக லாபம் பெறலாம். மார்க்கெட் கமிட்டி குடோனில் 120 நாட்கள் வரை எள் இருப்பு வைத்து, தற்போதைய விலையில் 70 சதவீதம் வரை விற்பனைக்குழு மூலம் 5 சதவீத வட்டியில் விவசாயிகள் கடன் பெறலாம்.இவ்வாறு கமிட்டி கண்காணிப்பாளர் செந்தில்முருகன் கூறினார்.

## நவரைப் பட்டம்நெல் சாகுபடி

**விழுப்புரம்**: விழுப்புரம் மாவட்டத்தில் நவரைப் பட்டத்தில் நடவு செய்த நெல் வயல்கள் அறுவடைக்கு தயாராக உள்ளன. மாவட்டத்தில் இந்தாண்டு பருவ மழை குறைந்த போதும், கிடைக்கும் குறைந்தளவு நீரைப் பயன்படுத்தி, குறைவான பரப்பளவில் நெல் நடவு செய்துள்ளனர். குறைந்த வயதுடைய ஏ.டி.டி., 37, ஏ.டி.டி.43, ஏ.டி.டி.45 ரகங்கள் பயிரிட்டு, அறுவடை செய்யப்படுகின்றன. நெல் விலையும் கூடுதலாக இருப்பதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## கோமுகி அணை பகுதியில் சோளம் அறுவடை தீவிரம்

**கச்சிராயபாளையம்**: கோமுகி அணை பகுதியில் மானாவாரியாக பயிர் செய்யப்பட்ட சோளப் பயிர்கள் அறுவடை பணிகள் துவங்கியது. விழுப்புரம் மாவட்டத்தில் இந்தாண்டு நிலவிய வறட்சியின் காரணமாக கச்சிராயபாளையம் அடுத்துள்ள கோமுகி அணை விரைவில் தண்ணீரின்றி வற்றியது. அணையின் உட்பகுதியில் மக்கள் வெள்ளரி, கம்பு, சோளம் ஆகியவற்றை மானாவாரியாக பயிர் செய்திருந்தனர். தற்போது அணையில் சாகுபடி செய்யப்பட்ட சோளப் பயிர்கள் அறுவடைக்கு தயாராகியுள்ளது. இதை தொடர்ந்து விவசாயிகள் சோளம் அறுவடை செய்து, உலர்த்தும் பணியில் தீவிரம் காட்டி வருகின்றனர்.

## கி.கிரி.,யில் கோடை மழையில் கம்பு சாகுபடி;விவசாயிகளுக்கு வேளாண்துறை அறிவுரை

**கிருஷ்ணகிரி**: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தற்போது கோடை மழை பெய்ய துவங்கியுள்ள நிலையில், குறைந்த நாட்களில், அதிக லாபம் பெற விவசாயிகள், கம்பு சாகுபடி செய்யலாம் என, வேளாண் துறையினர் தெரிவித்துள்ளனர். இது குறித்து, வேளாண் துறையினர் கூறியதாவது: கம்பினை மானாவாரி பயிராகவும், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் பெய்யக்கூடிய கோடை மழையை கொண்டு, இறவை பட்டத்திலும், சாகுபடி செய்யலாம். மாவட்டத்தில் குறிப்பாக, கிருஷ்ணகிரி, பர்கூர், ஊத்தங்கரை மற்றும் மத்தூர் ஆகிய சுற்று வட்டார பகுதிகளில், பரவலாக இறவை கம்பு சாகுபடி செய்யப்படுகிறது.கிளைக்கும் தன்மை கொண்டதுமான, கம்பு பயிர் மிகவும் வறட்சியான பகுதிகளிலும், சத்துக்குறைவான மண்பாங்கான நிலங்களிலும், சத்து அதிகம் உள்ள வண்டல் மண் நிலங்களிலும், பயிர் செய்யலாம்.ஏப்ரல் மற்றும் மே மாதங்களில், விவசாயிகள் ஐ.சி.எம்.வி.,221, ஐ.சி.எம்.எஸ்.,7703 மற்றும் கோ, 7 ரக கம்புகளை சாகுபடி செய்யலாம். ஏக்கருக்கு, இரண்டு கிலோ விதைக்கு, தலா ஒரு பாக்கெட் அசோஸ்பைரில்லம், மற்றும் ஒரு பாக்கெட் பாஸ்போபாக்டீயா நுண்ணுயிர் கலவையை, 200 மி.லி., ஆரிய அரிசி கஞ்சியுடன் கலந்து, 30 நிமிடம் நிழலில் உலர்த்தி, 24 மணி நேரத்துக்குள் விதைக்க வேண்டும். ஒரு ஏக்கர் கம்பு நடவு செய்ய, மூன்று சென்ட் பரப்பு நாற்றங்கள் தேவை. 300 கிலோ, நன்கு மக்கிய தொழு உரத்துடன், ஒன்பது கிலோ சூப்பர் பாஸ்பேட் உரத்தினை கலந்து, கடைசி

உழவுக்கு முன்பாக சீராக இடவேண்டும். இதனை தொடர்ந்து, மேட்டுப்பாத்திகள் அமைத்து, விதைகளை விதைக்க வேண்டும். ஏக்கருக்கு, ஐந்து டன் மக்கிய தொழு உரத்துடன் தழை, மணி,சாம்பல் சத்துதரவல்ல யூரியா மற்றும் பாஸ்பேட் மற்றும் முயூரேட் ஆப் பொட்டாசினை கலந்து கடைசி உழவுக்கு முன், உழவு செய்து நன்கு கலக்க வேண்டும். 16 நாள் வயதுடைய நாற்றுகளை, ஒரு குத்துக்கு, இரண்டு வீதம் வயலில் நடவு செய்ய வேண்டும்.நடவு வயலில், ஒரு ஏக்கருக்கு, ஐந்த கிலோ சிறுதானிய நுண்ணூட்ட சத்தினை நட்டவுடன், போதுமான அளவு மணலுடன் கலந்து மேலாக இடவேண்டும். மேலும் தலா, நான்கு பாக்கெட் அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போபாக்டீரியா நுண்ணுயிர் கலவையை, தொழு உரத்துடன் கலந்து, நடவு வயலில் இட வேண்டும்.கம்பு பயிரில் தூர் கட்டும் பருவத்தில், ஏக்கருக்கு, 14 கிலோ தழைச்சத்து தரவல்ல, 31 கிலோ யூரியாவினை இட்டு, தண்ணீர் பாய்ச்ச வேண்டும். இந்த தொழில் நுட்பங்களை, கம்பு சாகுபடியில், விவசாயிகள் கையாண்டு குறைந்த நாட்களில் குறைந்த நீரை கொண்டு, இறவை கம்பு சாகுபடி செய்து பயன்பெறலாம்.கம்பு பயிர் சாகுபடியில், முக்கிய தொழில் நுட்பங்களை கடைபிடித்தால், இறவை கம்பு சாகுபடியில், ஏக்கருக்கு, 1,200 கிலோவும், மானாவாரி கம்பில் ஏக்கருக்கு, 800 கிலோவும் மகசூல் பெறலாம். ஒரு கிலோ கம்பு, 15 ரூபாயுக்கு விற்பனை செய்யப்பட்டாலும் இறவை கம்பு சாகுபடியில் ஏக்கருக்கு, 15 ஆயிரம் ரூபாயும், மானாவாரி கம்பு சாகுபடியில், 10 ஆயிரம் ரூபாயும் லாபம் பெறலாம்.இவ்வாறு கூறினர்.

## மொடக்குறிச்சியில் தேங்காய், கொப்பரை ஏலம்

**ஈரோடு:** மொடக்குறிச்சி ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் விவசாய விளை பொருட்கள் ஏலம் போனது. மொடக்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில்தேங்காய் மற்றும் கொப்பரை தேங்காய் ஏலம் விடப்பட்டது. மொடக்குறிச்சி மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் 87 மூட்டைகளில் ஆயிரத்து 600 கிலோ எடையுள்ள கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்தனர். முதல் தரம் அதிகபட்சம் ரூ.102.85, குறைந்த பட்சம் ரூ.98.05, இரண்டாம் தரம் அதிகபட்சம் ரூ.97.90, குறைந்த பட்சம் ரூ.78.50க்கும் விற்றது. ஒரு லட்சத்து 62 ஆயிரம் ரூபாய்க்கு ஏலம் போனது. இரண்டு டன் எடையுள்ள 278 தேங்காய், ஏல விற்பனை நடந்தது. அதிக பட்சம் டன் ரூ.29,153க்கும், குறைந்த

பட்சம் 24,067க்கும் ஏலம் போனது. மொத்தம் 63 ஆ யிரத்து 598 ரூபாய்க்கு விற்றது. மொத்தம் ரூ. இரண்டு லட்சத்து 25ஆயிரத்து 598க்கு கொப்பரை மற்றும் தேங்காய் ஏலம் போனது.

## கால்நடை பராமரிப்பு துறை ஆபீஸ் ரூ.40 லட்ச மதிப்பில் பராமரிப்பு

**ஈரோடு**: ஈரோடு மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குநர் அலுவலக வளாகம் 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பராமரிப்பு பணி நடக்கிறது.

ஈரோடு மாவட்டத்தில் உள்ள கால்நடை மருத்துவமனைக்கு தலைமையிடமாக, ஈரோடு கால்நடை பெருமருத்துவமனை திகழ்கிறது. கால்நடை மருத்துவமனை வளாகத்தில், கால்நடை மண்டல இணை இயக்குனர் அலுவலகம், துணை இயக்குனர் அலுவலகம், நோய் புலனாய்வு பிரிவு, கோழி நோய் ஆராய்ச்சிக்கூடம், உதவி இயக்குனர் அலுவலகம், கால்நடை பெரு மருத்துவமனைகள் உள்ளன. இங்கு, கால்நடைகளின் உள், வெளி நோயாளிகள் சிகிச்சை கூடம், பண்டக வைப்பறை ஆகியவை உள்ளன.

ஈரோடு மாவட்டம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து, வளர்ப்பு கால்நடைகள் சிகிச்சைக்காக அதிகளவில், இங்கு கொண்டு வருகின்றனர். அவற்றில் பசு, எருமை, நாய், ஆடு, கோழி, பூனை, குதிரை ஆகியவைகள் அதிகளவில் சிகிச்சைக்காக வருகின்றன. கால்நடைகளுக்கு சிகிச்சை பணிகள், ஆடு, பசு, எருமை இவைகளுக்கு கரூவூட்டல், சினை பரிசோதனை ஆகிய அனைத்து விதமான சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தினமும் இதுபோன்று சிகிச்சைக்காக, 200 கால்நடைகள் இங்கு வருகின்றன. இவற்றில் கோபி, வெள்ளகோவில், காங்கேயம், பெருந்துறை ஆகிய பகுதிகளில் இருந்து, தினமும் ஏராளமான கால்நடைகள் சிகிச்சைக்காக கொண்டு வரப்படுகிறது. இக்கால்நடைகளுக்கு, தமிழ்நாடு மருந்து வாணிப கழகம் மூலம் மருந்துகள் வினியோகம் செய்யப்படுகிறது. கால்நடை பராமரிப்பு துறை அலுவலக வளாகத்தில், 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பராமரிப்பு பணி நடக்கிறது. நுழைவு வாயிலில் துவங்கி, இணை இயக்குநர் அலுவலகம் வரை, கோட்டக்கல் பதிக்கும் பணி தீவீரமாக நடக்கிறது. தவிர, நோய் புலனாய்வு பிரிவு அருகே இருந்த, கால்நடை பராமரிப்பு துறையின் உதவி இயக்குநர் அலுவலகம், கான்பரன்ஸ் ஹாலாக மாற்றும் பணி தீவிரமாக நடக்கிறது. இந்த அறையில், விவசாயிகள்

மற்றும் அதிகாரிகள் அடங்கிய குழுவினர் ஆய்வுக்கூட்டம் நடத்தவே இந்த ஏற்பாடாகும்.

### சூரிய சக்தி மின் மோட்டார் பெற விவசாயிகள் ஆர்வம்

**ஆனைமலை** : ஆனைமலை ஒன்றியத்தில் உள்ள வேளாண்மை அலுவலகத்தில், செயல்பட்டு வரும் தோட்டக்கலைத்துறை பிரிவில் சூரிய சக்தி மின்மோட்டார் பெற தங்கள் பெயரை பதிவு செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.இப்பகுதியில் உள்ள விவசாய நிலங்கள் பி.ஏ.பி திட்டத்தில் உள்ள கால்வாய்கள், மற்றும் பழைய ஆயக்கட்டு வாய்கால்களின் மூலம் பாசன வசதி பெறுகின்றன. அது இன்றி கிணற்று பாசனம் மூலம் வேளாண் தொழில் நடைபெறும் விளைநிலங்களும் உண்டு. அந்த கிணறுகளுக்கு அரசின் இலவச மின்சாரம், சுயநிதி திட்டம் ஆகியவற்றில் மின் இணைப்பை பெற்று விவசாயம் செய்து வந்தனர். தற்போது ரூ.ஐந்து லட்சம் மதிப்பிலான சூரிய சக்தியில் இயங்கும் 5.ஹெச்.பி மின் மோட்டாரினை விவசாயிகள் ரூபாய் ஒரு லட்சத்தினை பங்களிப்பு தொகையாக செலுத்த வேண்டும் என வேளாண்துறை அறிவித்திருந்தது.இதற்கான விண்ணப்பத்தினை பெற விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர் ஆனைமலை வேளாண்மை அலுவலகத்தில் உள்ள தோட்டக்கலைத்துறை பிரிவில் நேற்றுமுன்தினம் முதல் விவசாயிகள் ஆர்வமுடன் விண்ணப்பத்தினை பெற்று செல்கின்றனர்.

### பச்சை மிளகாய் ஒரு கிலோ ரூ.70

**பொங்கலூர்** : ஆறு மாத பயிராக இருப்பதால், தண்ணீர் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு, விவசாயிகள் மிளகாய் சாகுபடி பரப்பை குறைத்துக்கொண்டனர்.

இதன் காரணமாகவும், வெயில் அதிகரித்து காணப்படுவதால், பூக்கள் உதிர்வதாலும் மகசூல் மிகவும் குறைந்து விட்டது. பச்சை மிளகாய்க்கான தேவைக்கும், விளைச்சலுக்கும் இடையே பெரும் இடைவெளி ஏற்பட்டுள்ளது. கடந்த மாசி மாதத்தில் 20 ரூபாய்க்கு விற்பனையான ஒரு கிலோ பச்சை மிளகாய், தற்போது 70 ரூபாய்க்கு விற்பனையாகிறது.

## ஒரு மணிநேரம் பெய்த மழையால் ஆறுதல்

**குன்னூர்** : குன்னூருக்கு ஒரு மணி நேரம் மழை பெய்ததால் மக்கள் ஓரளவு நிம்மதியடைந்துள்ளனர். குன்னூரில் கடந்த பல மாதங்களாக மழையில்லாததால் வறட்சி ஏற்பட்டு வெயிலின் தாக்கம் அதிகரித்திருந்தது. இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு 7:15 மணியில் இருந்து சுமார் ஒரு மணி நேரம் மழை பெய்ததால் குளிர்ச்சியான காலநிலை ஏற்பட்டது. இதனால் மக்கள் ஓரளவு ஆறுதல் அடைந்தனர். இனி தொடர்ந்து மழை பெய்தால் மட்டுமே ரேலியா அணையில் தண்ணீர் வரத்து அதிகரித்து, மக்களுக்கு பயனுள்ளதாக அமையும்.

## உதவி வேளாண் அலுவலர் பணிக்கு கரூரில் பரிந்துரை

**கரூர்**: தமிழ்நாடு வேளாண்மை பல்கலையால் அறிவிக்கப்பட்டுள்ள, உதவி வேளாண்மை அலுவலர் பணியிடங்கள் நிரப்படுகிறது என, கரூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் துரைராஜ் தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்ட அறிக்கை: உதவி வேளாண்மை அலுவலர் பணியிடங்களுக்கு, கரூர் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் பதிவுதாரர்கள் பரிந்துரை செய்யப்பட உள்ளனர். எனவே பதிவுதாரர்களில், இரண்டாண்டு விவசாய பட்டயப்படிப்பு, இரண்டாண்டு தோட்டக்கலை பட்டயபடிப்பு கல்வி தகுதியுடையவர்கள், வரும், 8ம் தேதிக்கு முன்னதாக, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்துக்கு வரவேண்டும். அப்போது, கல்வி சான்றுகள், வேலைவாய்ப்பு அடையாள அட்டை, சாதி சான்று, ரேஷன்கார்டுஆகியவற்றை கொண்டு வர வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## கறவை மாடுகள் வளர்ப்பு பயிற்சி

**புதுக்கோட்டை**: புதுக்கோட்டை மாவட்டத்தில், ஐ.ஓ.பி., வங்கியின் கிராமிய சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிலையம் சார்பில், இளைஞர்களுக்கு கறவை மாடுகள் வளர்ப்பதற்கான வழிமுறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட உள்ளது.
இதில், 18 வயதுக்கு மேல், 35 வயதுக்குட்பட்டவர்கள் பங்கேற்கலாம். பயிற்சி வகுப்பில் பங்கேற்க விரும்புவோர் கல்விசான்றிதழ், ரேஷன்கார்டு, ஃபோட்டோவுட ன் வரும், 8ம் தேதிக்குள் புதுக்கோட்டை டவுன் மேல 4ம் வீதியில்

உள்ள ஐ.ஓ.பி., கிராமிய சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிலையத்தை நேரில் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாம்.
மேலும் தகவல்பெற விரும்புவோர், 99947 37185, 04322 225339 ஆகிய போன் எண்களில் தொடர்புகொள்ளலாம்.

## ஒட்டன்சத்திரத்தில் கொட்டியது மழை: விவசாயிகள் மகிழ்ச்சி

**ஒட்டன்சத்திரம்** : ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றி உள்ள கிராமப்பகுதிகளில் நேற்று ஒரு மணி நேரம் கனமழை பெய்ததால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றி உள்ள பகுதிகளில் பருவமழை கைவிட்ட போதிலும் கோடை மழை கைகொடுத்தது.
ஏற்கனவே கோடை வெயில் கொளுத்தும் வெயிலாக மாறி மக்களை வாட்டியது.
வெயிலின் உக்கிரம் அதிகமாக இருக்கும் கால கட்டமான அக்னி நட்சத்திரம் நேற்று தொடங்கியது. அதிக உஷ்ணத்தால் தவித்த மக்களுக்கு அக்னி நட்சத்திர காலத்தை எப்படி கடத்தப் போகிறோம் என்று தவித்து வந்தனர்.
இந்நிலையில் நேற்று இரவு 6.30 மணிக்கு லேசான தூறலுடன் இப்பகுதியில் ஆரம்பித்த மழை அடுத்தடுத்து கனமழையாக நீடித்து ஒரு மணி நேரம் வரை பெய்தது. இதனால் வடிகால்வசதியில்லாததால் ரோடு பகுதிகளில் மழைநீர் ஆறாக ஓடியது. வெப்பம் தணிந்து குளிர்காற்று வீசியது.
காய்ந்து போகும் நிலையில் உள்ள தென்னை, பனை மரங்கள் இம்மழை நீரைக் கொண்டு இன்னும் சிறிது காலம் தாக்குப் பிடிக்கும். ஒட்டன்சத்திரம் பகுதிகளில் பெய்துள்ள இந்த மழை விவசாயிகளுக்கு நம்பிக்கையை கொடுத்துள்ளது. தொடர்ந்து மழை பெய்தால் கோடை உழவுக்கு விவசாயிகள் தயாராகிவிடுவர்.
மழையளவு : திண்டுக்கல் மாவட்டத்தில் நேற்று முன்தினம் பெய்த மழை அளவு விபரம் (மி.மீ): நிலக்கோட்டை- 2.2, திண்டுக்கல்-26.7, பழநி-11.5, சத்திரப்பட்டி-3, காமாட்சிபுரம்-10.4, நத்தம்-1.5, கொடைக்கானல்-15.6, போர்ட்கிளப்-12.25.

## வனத்துறை மூலம் 6 லட்சம் மரக்கன்றுகள் வளர்க்க திட்டம்

**தாண்டிக்குடி** : தாண்டிக்குடி மலைப்பகுதியில் 6 லட்சம் சில்வர் ஓக் மரக்கன்றுகள் வளர்க்கும் பணி நடந்து வருகிறது.

தமிழ்நாடு பல்லுாயிர் பரவல் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் வத்தலக்குண்டு வனச்சரகம் தாண்டிக்குடி மலைப்பகுதியில் விவசாயிகளுக்கு இலவசமாக சில்வர் ஓக் மரக்கன்றுகள் வழங்க 2 லட்சம் நாற்றுக்கள் வளர்க்கும் பணியை வனத்துறையினர் செய்து வருகின்றனர். இத்திட்டத்தில் வளர்க்கப்படும் நாற்றுக்கள் நன்கு வளர்ச்சி பெற்று இரு மாதத்தில் விவசாயிகளுக்கு வழங்க தயாராகும் என வனத்துறையினர் தெரிவித்தனர்.

மேலும் கன்னிவாடி வனச்சகரம் , வனமேம்பாட்டு மையம் சார்பில் மேலும் 4 லட்சம் மரங்கன்றுகள் வளர்க்கப்படுகின்றன. இதில் நாற்று நடவு செய்வதற்கு, பராமரிப்பு மேற்கொள்ள விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. கடந்தாண்டும் இத்திட்டத்தின் மூலம் ஏராளமான விவசாயிகள் பயனடைந்தனர். தொடர்ந்து நடப்பாண்டிலும் பயன்பெற ஆர்வமுள்ள விவசாயிகள் சம்மந்தப்பட்ட வனச்சரக பகுதி ரேஞ்சர் அலுவலகத்தை தொடர்பு கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## கம்பம் பகுதியில் சாரல் மழை; மானாவாரி பணி துவக்கம்

**கம்பம்** : கம்பம் பள்ளத்தாக்கில், கடந்த சில நாட்களாக பரவலாக சாரல் மழை பெய்து வருகிறது. மானவாரி நிலங்களில், விவசாயிகள் உழவுப் பணியை துவக்கியுள்ளனர்.

கடந்த சில ஆண்டுகளாகவே கம்பம் பள்ளத்தாக்கில்,நெல் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது. ஒரு போகம் கைவிடப்படும் நிலை ஏற்பட்டு வருகிறது. தோட்டங்களில், நிலத்தடி நீர் மட்டம் சரிந்துள்ளதால், கிணறுகளில் நீர் மட்டம் குறைந்துள்ளது.

இந்நிலையில், கடுமையான வெப்பம் நிலவி வந்த நிலையில், கடந்த சில நாட்களாக கம்பம் பள்ளத்தாக்கில், சாரல் மழை பெய்து வருகிறது. கம்பம், கூடலுார், புதுப்பட்டி, அனுமந்தன்பட்டி, சுருளிப்பட்டி, நாராயணத்தேவன்பட்டி, காமயகவுண்டன்பட்டி உள்ளிட்ட பல பகுதிகளில் 3 மணி நேரம் முதல் 5 மணி நேரம் வரை சாரல் பெய்து,பூமியை குளிர்வித்து வருகிறது.

இந்த மழையால் மகிழ்ச்சியடைந்துள்ள விவசாயிகள், மானாவாரி நிலங்களில் உழவு பணியை துவக்கியுள்ளனர். சூரியகாந்தி, எள் போன்ற பயிர் சாகுபடிக்கு தயாராகி வருகின்றனர். தண்ணீரின்றி பட்டுப்போகும் நிலைக்கு வந்துள்ள

கொட்டை முந்திரி, துளிர்விடத்துவங்கியுள்ளது.தோட்டங்களில், கிணறுகளில் நீர் மட்டம் உயரத் துவங்கியுள்ளது.

கிணறுகளில் நீர் வரத்து ஆரம்பமாகியுள்ளது.விவசாயிகள் கூறுகையில், ""கடும் வெப்பம் நிலவி வந்த நிலையில், இப்போது பெய்து வரும் சாரல், விவசாயிகளுக்கு வரப்பிரசாதமாகும். கிணறுகளில் நீர் மட்டம் உயர்வதால், இறவைப்பாசனம் கைகொடுக்கும்.

ஆடு,மாடு, கால்நடைகளுக்கு தீவனப்பற்றாக்குறை ஓரளவு குறையும்.மானாவாரி நிலங்களில் விவசாய பணிகள் ஆரம்பமாகும்' என்றனர்.

## பரமக்குடியில் ஒரு மணி நேரம் கொட்டி தீர்த்த மழை

**பரமக்குடி** : பரமக்குடியில் ஒரு மணிநேரம் கொட்டி தீர்த்த மழையால் நகரின் தாழ்வான இடங்களில் சாக்கடை கழிவு நீருடன், மழை நீர் தேங்கியதால் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்பட்டது.

நேற்று காலை முதலே பரமக்குடி பகுதியில் மேகம் மப்பும், மந்தாரமுமாக காணப்பட்டது. கோடை வெயிலில் தவித்த மக்களுக்கு, இதமளிக்கும் வகையில் பகல் 12 மணி முதல் மதியம் 1 மணி வரை மழை கொட்டி தீர்த்தது.

இதனால், நகரின் போக்குவரத்து மிகுந்த காந்திசிலை, கள்ளழகர் தெரு, சவுகதலி, உழவர்சந்தை ரோடு, தரைப்பாலம், தேசிய நெடுஞ்சாலை ஓரங்களில் மழை நீர் வெள்ளம் போல் ஓடியது.

தாழ்வான இடங்களில் மழை நீர் செல்ல வழியின்றி, சாக்கடை கழிவு நீருடன் கலந்ததால் டூ வீலர் மற்றும் கனரக வாகன ஓட்டுனர்கள் சிரமமடைந்தனர். உழவர் சந்தை ரோட்டில் கழிவு நீர் வாய்க்கால் அடைப்பை சரி செய்ய, நகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# இன்றைய வேளாண் செய்திகள்

## தமிழகத்தில் இன்று அதிகாலை மிதமான மழை



சென்னை: தமிழகத்தில் இன்று அதிகாலை மிதமான மழை பெய்தது. ஒரு சில இடங்களில் கன மழை பெய்தது. சென்னையில் கிண்டி, மீனம்பாக்கம் தேனாம்பேட்டை, எழும்பூர் நுங்கம்பாக்கம், அண்ணாசலை மற்றும் வேளச்சேரி உள்ளிட்ட பகுதிகளில் கனமழை பெய்தது. இதுதவிர சிதம்பரம், காரைக்கால் ஆகிய பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. குறைந்த கற்றழுத்தம் தாழ்வு பகுதி காரணமாக இம்மழை பெய்வதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.

இம்மழை மேலும் 3 நாட்களுக்கு நீடிக்கும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஒரே வாரத்தில் முட்டை விலை 43 காசுகள் அதிகரிப்பு



நாமக்கல்: ஒரே வாரத்தில் முட்டை விலை கிடுகிடுவென 43 காசுகள் உயர்ந்துள்ளது. நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு, நேற்று ஒரு முட்டையின் விலையில் 11 காசு உயர்த்த முடிவு செய்தது. அதன்படி, முட்டையின் விலை 300 காசில் இருந்து 311 காசாக அதிகரித்துள்ளது. ஒரே வாரத்தில் முட்டை விலை 43 காசுகள் வரை நாமக் கல் மண்டலத்தில் உயர்ந்துள்ளது. கொளுத்தும் வெயி லால் முட்டை உற்பத்தி குறைந்து வருகிறது. வெப்ப தாக்குதலில் இருந்து கோழிகளை பாதுகாக்க முடியாமல் பண்ணையாளர்கள் தவிக்கின்றனர்.

தமிழகம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் முட்டை உற்பத்தி குறைவால் முட்டை தேவை அதிகரித்து வருகிறது. இதனால் முட்டை விலை உயர்த்தப்பட்டுள்ளதாக, தமிழ்நாடு முட்டை கோழிப்பண்ணையாளர்கள் சங்க துணைத்தலைவர் வாங்கிலி சுப்பிரமணியம் தெரிவித்துள் ளார். ஒரு கிலோ முட்டைக்கோழியின் பண்ணை கொள்முதல் விலை ரூ.50 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழியின் பண்ணைகொள்முதல் விலை ரூ.75 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## இஞ்சி கிலோ ரூ.100 ஆனது

**வெயிலால் வரத்து குறைவு காய்கறிகள் விலை உயர்கிறது**



சென்னை: கோடை வெயிலின் தாக்கத்தால் இஞ்சி விளைச்சல் கடுமையாக பாதித்துள்ளது. இதனால் ஒரு கிலோ இஞ்சி 70 ரூபாயில் இருந்து 100 ரூபாயாக

உயர்ந்துள்ளது. தமிழகத்தில் ஏற்கனவே பல பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருகிறது. ஏரி, குளம், கிணறுகளின் நீர் மட்டம் குறைந்துள்ளது. விவசாயத்துக்கு கூட தண்ணீர் இல்லாத நிலை ஏற்பட்டு வருகிறது. இந்நிலையில் தற்போது கோடைக்காலம் தொடங்கி உள்ளதால் தண்ணீர் தட்டுப்பாடு மேலும் அதிகரித்துள்ளது. இதனால், பொதுமக்கள், விவசாயிகள் என்று அனைத்து தரப்பினரும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். போதிய தண்ணீர் இல்லாததால் இஞ்சி, பச்சை மிளகாய், பீன்ஸ் உள்ளிட்ட பயிர்கள் கருகி விளைச்சல் கடுமையாக குறைந்துள்ளது.

இதனால் கோயம்பேட்டுக்கு வரும் காய்கறிகள் வரத்தும் வெகுவாக குறைந்துள்ளது. தினமும் கோயம்பேடு மார்க்கெட்டுக்கு சராசரியாக 800 லாரிகளில் காய்கறிகள் வந்தன. தற்போது வெறும் 600 லாரிகளில் மட்டுமே காய்கறிகள் வருகின்றன. அவ்வாறு வரும் காய்கறிகளும் தரமானதாக இல்லை என்று வியாபாரிகள் குற்றம் சாட்டி வருகின்றனர். சில்லரை கடைகளில் பீன்ஸ், பச்சை மிளகாய், இஞ்சி விலை மொத்த மார்க்கெட்டை விட 20 முதல் 30 சதவீதம் வரை அதிகமாக உள்ளது. இதுகுறித்து கோயம்பேடு காய்கறி வணிகர்கள் சங்க நிர்வாகி சந்திரன் கூறியதாவது: கோடைக்காலம் தொடங்கி உள்ளதால் காய்கறி விளைச்சல் குறைந்துள்ளது.

இதனால் கோயம்பேட்டுக்கு காய்கறி வரத்து குறைந்துள்ளது. எனவே, வரும் வாரங்களில் காய்கறி விலை 5 முதல் 10 சதவீதம் உயரும் நிலை ஏற்பட்டுள்ளது. கோடை வெயிலால் பச்சைமிளகாய், இஞ்சி, பீன்ஸ் வரத்து மிகவும் குறைந்துள்ளது. ஆந்திராவில் இருந்து தினமும் 13 லாரிகளில் பீன்ஸ், 15 லாரிகளில் பச்சை மிளகாய் வருவது வழக்கம். தற்போது பீன்ஸ், பச்சைமிளகாய் 6 முதல் 8 லாரிகள் மட்டுமே வருகிறது.

இதுதவிர, கேரளாவில் இருந்து இஞ்சி வரத்தும் 7 லாரியாக குறைந்துள்ளது. இது வழக்கத்தை விட பாதிதான். இரண்டு நாள் முன்பு இஞ்சி கிலோ ரூ.70 என இருந்தது. தற்போது மொத்த விற்பனையில் இஞ்சி கிலோ ரூ.90 முதல் 100 ரூபாயும், பச்சைமிளகாய் ரூ.25, பீன்ஸ் கிலோ ரூ.50 வரையும் விற்கப்படுகிறது. இந்த விலை உயர்வு வரும் வாரங்களில் மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## நாட்டு கோழி குஞ்சுகள் நல்லா வளர வேண்டுமா? கால்நடைத்துறையினர் ஆலோசனை

காரைக்குடி, :நாட்டு கோழி குஞ்சுகளுக்கு தீவன மாக கரையான் தயாரிப் பது குறித்து கால்நடைத்துறையினர் ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

காரைக்குடி மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களில் அதிக அளவில் கால்நடை களை வளர்த்து வருகின்ற னர். கால்நடைகளுக் கான தீவன பொருட்கள் விலை உயர்வு காரணமாக கோழிகளுக்கு கரையான் தீவனங் களை வழங்கலாம் என கால்நடைத்துறையி னர் ஆலோ சனை தெரிவித்துள்ளனர். இதுகுறித்து கால்நடை துறையினர் கூறியதாவது: கரையான் உண்ட நாட்டு கோழி குஞ்சுகள் மற்ற குஞ்சு களை விட இருமடங்கு வளர்ச்சி அடையும். கரை யான் சத்து மிக்கது. இதில் புரதம் 36 சதவீதம், கொழுப்பு 44.4 சதவீதம், எரிசக்தி 560 கலோரிகள் உள்ளன.

சில வகை கரையான்களில் வளர்ச்சி ஊக்கி 20 சதவீதம் உள்ளது. இதன்மூலம் கோழி குஞ்களின் எடை கூடும். இத்தகைய கரையான்களை உற்பத்தி செய்ய ஒரு பழைய பானை க்குள் கிழிந்த, கந்தல் துணி, இற்றுப்போன கட்டை, மட் டை, காய்ந்த இலை, ஓலை போன்ற நார் பொருட்கள் ஆகியவற்றை திணித்து அவ ற்றி கொஞ்சம் நீர் தெளிக்க வேண்டும்.

இதனை வீட்டிற்கு வெளியே தரையில் கவிழ் த்து வைக்க வேண்டும். மாலையில் கவிழ்த்து வை த்து, மறு நாள் காலையில் பானையை பார்த்தால் தேவையான கரையான்கள் உற்பத்தியாகி இருக்கும்.

கரையான் இருக்கும் பகுதியில் கோழி குஞ்சுகளை விட்டால் அனைத்தையும் குஞ்சுகள் தின்றுவிடும். கரையான் தின்ற அரைமணி நேரத்துக்கு குஞ்சுகளுக்கு தண்ணீர் வைக்கக் கூடாது.

ஒரு பானையில் சேரும் கரையான் 10 முதல் 15 குஞ்சுகளுக்கு போதுமானது. செம்மண் உள்ள பகுதிகளில் அதிக கரையான்கள் கிடைக்கும். தேவைக்கு ஏற்ப ஒன்றுக்கு மேற்பட்ட பா னைகளை கவிழ்த்து வைக் கலாம். சூரிய உதயத்திற்கு முன்பு கரையான் களை கோழிகளுக்கு இரை யாக்க வேண்டும். இல்லாவிட்டால் அப்பகுதியில் உள்ள எறும்புகள் கரையான்களை தின்றுவிடும் என்றார்.

## வெப்பம் அதிகரிப்பதால் முட்டையின் எடை குறையும் வானிலை மையம் தகவல்

நாமக்கல், :வெப்பம் அதிகரிப்பதால் முட்டையின் எடை குறையும் என வானிலை மையம் தெரிவித்துள்ளது. இது குறித்து, நாமக்கல் கால்நடை வானிலை ஆலோசனை மையம் வரும் 3 நாட்களுக்கான வானிலை அறிக்கை வெளியிட்டுள்ளது.

அதில் கூறியிருப்பதாவது:

வெப்பநிலை அதிகரித்து வருவதால், கோழிகளிடையே தீவன எடுப்பு மிகவும் குறைந்து காணப்படும். இதனால் முட்டை உற்பத்தியும், முட்டையின் எடையும் குறைந்து காணப்படும். உற்பத்தியை அதிகரிக்கவும், கோழிகளில் தீவன எடுப்பு அதிகரிக்க செய்யவும் உதவும் முறைகளான இரவு நேரத்தில் தீவனமிடுதல், தீவனத்தில் புரதத்தை குறைத்து அமினோ அமிலங்கள் சேர்த்தும், சோர்வு நீக்க மருந்துகளான எலக்ட்ரோலைட்ஸ் வைட்டமின் சி போன்றவற்றை சேர்த்து வரவேண்டும்.

தண்ணீரின் வெப்பம் அதிகரிக்காமல் பார்த்து கொள்ளவேண்டும். கடந்த வாரம் கோழியின நோய் ஆய்வகத்தில் ஆய்வு செய்த இறந்த கோழிகள் பெரும்பாலும் வெப்ப அயற்சி மற்றும் மேல்மூச்சுக்குழல் நோய் பாதிப்பால் இறந்திருப்பது தெரியவந்துள்ளது. எனவே, பண்ணையாளர்கள் கோடை கால பராமரிப்பு முறைகளை தவறாமல் கடைபிடிக்க வேண்டும். பண்ணை உயிர்பாதுகாப்பு முறைகளையும் கடைபிடிக்கவேண்டும்.

## கிண்ணக்கொரை கூட்டுறவு ஆலையில் விரைவில் தேயிலை உற்பத்தி துவங்கும்

மஞ்சூர், : கிண்ணக்கொரை கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையில் 20 நாட்களுக்குள் மீண்டும் தேயிலை உற்பத்தி துவங்கும் என எம்எல்ஏ புத்திசந்திரன் தெரிவித்தார்.

நீலகிரி மாவட்டம் மஞ்சூர் அருகே உள்ளது கிண்ணக்கொரை. இப்பகுதியில் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை ஒன்று இயங்கி வருகிறது. கடந்த 28ம் தேதி இரவு இத்தொழிற்சாலையில் தொழிலாளர்கள் தேயிலை உற்பத்தியில் ஈடுபட்டு கொண்டிருந்தார்கள். அப்போது தொழிற்சாலையில் அடுப்பு பகுதியில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் தொழிற்சாலையில் இருந்த டிரையர், டிரப்புகள், தேயிலை உலர்த்துவதற்கான காற்றாடிகள், இயந்திரங்கள் என சுமார் 50 லட்சம் மதிப்பிலான பொருட்கள் தீயில் எரிந்து சாம்பலானது. அதிர்ஷ்டவசமாக தொழிலாளர்கள் தொழிற்சாலையின் மற்றொரு பகுதியில் இருந்ததால் தப்பினார்கள்.

இந்நிலையில் தீ விபத்து ஏற்பட்ட கூட்டுறவு தொழிற்சாலையை நேற்று ஊட்டி எம்.எல்.ஏ புத்திசந்திரன் நேரில் பார்வையிட்டார். தொடர்ந்து விபத்தில் சேதமடைந்த டிரையர், காற்றாடிகள், டிரப்புகள் மற்றும் இயந்திரங்களை ஆய்வு செய்த அவர் சீரமைப்பு பணிகள் குறித்து இண்ட்கோசர்வ் சேர்மன் சிவக்குமாரிடம் கேட்டறிந்தார். இதை தொடர்ந்து எம்.எல்.ஏ புத்திசந்திரன் கூறுகையில், கிண்ணக்கொரை கூட்டுறவு தொழிற்சாலையில் திடீர் மின் கசிவு ஏற்பட்டதால் தீ

விபத்து ஏற்பட்டுள்ளது. தற்போது சீரமைப்பு பணிகள் துவக்கப்பட்டு தீவிரமாக நடைபெற்று வருகிறது. 20 நாட்களுக்குள் பணிகள் முடிந்து ஆலையில் மீண்டும் உற்பத்தி துவங்கும். அதுவரை கிண்ணக்கொரை கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையை சேர்ந்த விவசாயிகளின் பசுந்தேயிலை பிற கூட்டுறவு ஆலைகளுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார். உடன் இண்ட்கோசர்வ் இணை இயக்குனர் சாமிநாதன், குந்தா ஒன்றிய செயலாளர் மோகன், பாலகொலா தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க தலைவர் அசோக், மஞ்சூர் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை நிர்வாககுழு இயக்குனர் நஞ்சுண்டன் மற்றும் கிண்ணக்கொரை, மஞ்சூர் கூட்டுறவு தொழிற்சாலை தனி அலுவலர்கள் கோட்டைசாமி, அருணாச்சலம் நிர்வாககுழு தலைவர் ராஜன் மற்றும் உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

### தேயிலை தொழிலை மேம்படுத்த மைக்ரோ தொழிற்சாலை

குன்னூர், : மலை மாவட்டமான நீலகிரியில் கடந்த 60 ஆண்டுகளுக்கு முன்பு ஒன்று முதல் 2 ஏக்கர் வரையிலான நிலத்தில் மலைத்தோட்ட காய்கறிகள் மற்றும் சிறுதானிய பயிர்களை பயரிட்டு விவசாயிகள் தங்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வந்தனர்.

அப்போதைய காலக்கட்டத்தில் வனவிலங்குகளின் அச்சுறுத்தல் இல்லாமல் இருந்தது. காலப்போக்கில் மத்திய அரசு தேயிலை விவசாயம் மூலம் கூடுதல் வருமானம் கிடைக்கும் மென தேயிலை வாரியத்தை ஊக்கப்படுத்தியதால் பெரும்பாலான விவசாயிகள் மலைத்தோட்ட காய்கறி விவசாயத்தில் இருந்து மாறி தேயிலை விவசாயத்திற்கு மாறினர். இன்றைய நிலவரப்படி சுமார் ஒரு லட்சம் ஏக்கர் பரப்பளவில் 63 ஆயிரம் சிறு, குறு விவசாயிகள் தேயிலை விவசாயத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், சிறு, குறு தேயிலை விவசாயிகள் கருப்பு தேயிலை உற்பத்தி செய்ய முடிவு செய்து அதற்கான நடவடிக்கையை மேற்கொண்டனர்.அதனடிப்படையில் தேயிலை வாரியமும் அனுமதி வழங்கியது. கடந்த 10 ஆண்டுகளாக தேயிலை உற்பத்திக்கு முக்கிய கச்சா பொருளாக விளங்கும் பசுந்தேயிலைக்கு உரிய விலை கிடைக்காததால் பல்வேறு போராட்டங்களில் ஈடுபடுவதுடன் நலிவடைந்த விவசாயிகள் தங்களுடைய தேயிலை தோட்டங்களை அடி மாட்டு விலைக்கு விற்பனை செய்து சமவெளி பகுதிகளுக்கு இடம் பெயர்ந்து வருகின்றனர். தேயிலையின் தரத்தை அதிகரிக்க மத்திய அரசு சார்பில் ஆண்டு தோறும் கோடிக்கணக்கான ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இருப்பினும்,

பெரும்பாலான சிறு விவசாயிகளுக்கு மானிய உதவிகள் கிடைப்பதில்லை என்ற புகாரும் எழுந்துள்ளது.

இதனிடையே தேயிலைக்கு உரிய விலை வழங்க வலியுறுத்தி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததை அடுத்து அதனடிப்படையில் விலை நிர்ணயம் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. ஆனால் இன்று வரை இதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. தினமும் உயர்ந்து வரும் விலைவாசி உயர்வு தொழிலாளர்களின் சம்பள உயர்வு உள்ளிட்ட காரணங்களால் விவசாயிகள் கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி உள்ளனர்.

இதுகுறித்து நீலகிரி நெலிக்கோலு சிறு, குறு தேயிலை சாகுபடியாளர்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டு சங்க தலைவர் சிவன் கூறியதாவது: இம்மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் பசுந்தேயிலையின் மூலம் புற்று நோய், நீரிழிவு நோய், வயிறு பருமன், தோல் நோய் ஆகியவற்றை குணப்படுத்தும் தன்மை உள்ளது. பசுந்தேயிலையை சிறு விவசாயிகள் தேயிலை தொழிற்சாலைகளுக்கு வழங்காமல் உயர்ரக பசுந்தேனீர், சில்வர் டிப்ஸ் டீ, ஒய்ட் டீ மற்றும் பல்வேறு சுவைகளில் தேயிலை தூள் உற்பத்தி செய்து கூட்டு முயற்சியில் நேரடியாக சந்தைப்படுத்துவதன் மூலம் அதிக லாபம் கிடைப்பதுடன் பசுந்தேயிலைக்கு உரிய விலையும் கிடைக்கும். சிறு விவசாயிகளை உள்ளடக்கி வாழ்வாதார வளர்ச்சியை ஏற்படுத்த இச்சங்கம் முடிவு செய்துள்ளது. மாவட்டம் முழுவதும் தரமான பசுந்தேயிலை சாகுபடி செய்யும் விவசாயிகளை ஒன்றிணைந்து குறு பசுந்தேனீர் தொழிற்சாலைகள் (மைக்ரோ தேயிலை தொழிற்சாலை), சிறு பசுந்தேயிலை தொழிற்சாலை (மினி தேயிலை தொழிற்சாலை) ஏற்படுத்தும் பணியில் ஈடுபட்டு வருகிறது. இதன் மூலம் ஆண்டுக்கு ஒரு கோடி கிலோ பசுந்தேனீரை (கீரின் டீ) உற்பத்தி செய்து நேரடியாக சந்தைப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது.

இக்கூட்டு முயற்சிக்கு தேயிலை வாரியமும் உதவ முன் வரவேண்டும். இதனடிப்படையில் சிறு, குறு விவசாயிகளின் வாழ்வாதாரமும் உயரும். இவ்வாறு அவர் கூறினார்.

## அணைகளின் நீர்மட்டத்தில் மாற்றமில்லை நெல்லை மாவட்டத்தில் இடி, மின்னலுடன் மழை

நெல்லை, : நெல்லை மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் நேற்று மதியம் இடியுடன் கூடிய மழை பெய்ததால் வெப்பம் தணிந்து குளிர்ச்சி ஏற்பட்டது. வானிலையில் ஏற்பட்ட மாற்றத்தால் தமிழகத்தில் கடந்த ஒரு வார காலமாக இடியுடன் கூடிய கோடை மழை பெய்து வருகிறது.

காலையில் வெயில் வறுத்தெடுத்தபோதிலும் பிற்பகலில் திடீரென்று கருமேகங்கள் திரண்டு மிதமானது முதல் பலத்த மழை வரை பெய்தது.

குற்றாலம் பகுதியில் மழை அவ்வப்போது பெய்வதால் வறண்டு கிடந்த அருவிகளில் லேசாக தண்ணீர் விழுகிறது.

இதனால் பொதுமக்கள் அங்கு வர துவங்கியுள்ளனர். நெல்லை மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் நேற்று மதியம் இடி, மின்னலுடன் பலத்த மழை கொட்டி தீர்த்தது. கடையநல்லூரில் பெய்த மழையால் சாலைகளில் வெள்ளம் போல் தண்ணீர் தேங்கியது.

நெல்லை மாநகரை பொறுத்தவரை கடந்த இரு நாட்களாக வானம் மப்பும் மந்தாரமுமாக காணப்பட்டதால் வெப்பம் ஓரளவு தணிந்திருந்தது. இந்நிலையில் நேற்று மதியம் ஒரு மணியளவில் பாளை, நெல்லை மற்றும் சுற்றுப்பகுதிகளில் இடி, மின்னலுடன் மழை கொட்டியது.

இதனால் வெப்பம் ஓரளவுக்கு தணிந்தது. அம்பை, களக்காடு, தென்காசி உள்ளிட்ட மாவட்டத்தின் பிற பகுதிகளிலும் ஓரளவுக்கு மழை பெய்தது.

இருப்பினும் அணைகளின் நீர்மட்டத்தில் நேற்று பெரிய அளவில் மாற்றமில்லை. பாபநாசம் அணையின் நீர்மட்டம் இரு தினங்களாக 33.45 அடியாகவே உள்ளது.

மற்ற அணைகளின் நீர்மட்டம்: மணிமுத்தாறு 62.79 அடி, சேர்வலாறு 46, கடனா நதி 26.70, கருப்பாநதி 24.60, ராமநதி 25, குண்டாறு 14.10 அடியாக உள்ளது. நேற்று பெய்த திடீர் மழையால் உளுந்து உள்ளிட்ட மாற்று பயிர்களை பயிரிட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

தொடர்ந்து கோடை மழையை எதிர்பார்த்து விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கோவை வேளாண் பல்கலைக்கழக முன்னாள் மாணவிக்கு நோபல் பரிசு சுவீடன் நாட்டின் நோபல் அறக்கட்டளை வழங்கியது**




**கோவை,**

கோவை வேளாண் பல்கலைக்கழக முன்னாள் மாணவிக்கு, சுவீடன் நாட்டின் நோபல் அறக்கட்டளை அமைதிக்கான நோபல் பரிசு வழங்கி உள்ளது.

இது தொடர்பாக கோவை வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் கே.ராமசாமி வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:-

<u>முன்னாள் மாணவி</u>

கோவை வேளாண் பல்கலைக்கழக முன்னாள் மாணவி சனிலா வெலிகெலோத், அமைதிக்கான நோபல் பரிசு பெற்று உள்ளார். இவர் கடந்த 1989-ம் ஆண்டு, மதுரையில் உள்ள வேளாண் பல்கலைக்கழக கல்லூரியில் இளநிலை

வேளாண்மையும், 1991-ம் ஆண்டு கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் முதுநிலை உயிர் தொழில்நுட்பவியலும் படித்தார்.

அதைத்தொடர்ந்து சிங்கப்பூரில் உள்ள தேசிய பல்கலைக்கழகத்தில் உள் மூலக்கூறு உயிரியல் ஆய்வகத்தில் 2 ஆண்டுகள் பணிபுரிந்தார். பின்னர் 2005-ம் ஆண்டு ஆம்ஸ்டர்டாம் பல்கலைக்கழகத்தில் மேம்பட்ட முதுநிலை சுற்றுச்சூழல் மேலாண்மை படிப்பை படித்தார்.

<u>அமைதிக்கான நோபல் பரிசு</u>

கடந்த 2007-ம் ஆண்டு முதல் நெதர்லாந்தில் உள்ள ரசாயன ஆயுதங்களை தடை செய்யும் அமைப்பின், தொழில்நுட்ப ஆய்வகத்தில் சரிபார்ப்பு பிரிவில் உதவியாளராக பணியாற்றி வருகிறார். இந்த ஆய்வகம் 190 நாடுகளில் இருந்து 500 உறுப்பினர்களாக கொண்ட அமைப்பு ஆகும். இந்த அமைப்பின் 16 ஆண்டு சேவையை அங்கீகரிக்கும் வகையில் சுவீடன் நாட்டில் உள்ள நோபல் அறக்கட்டளை 2013-ம் ஆண்டின், அமைதிக்கான நோபல் பரிசை இந்த அமைப்பிற்கு வழங்கி உள்ளது.

இதன்படி இந்த ஆய்வகத்தில் உதவியாளராக உள்ள, கோவை வேளாண் பல்கலைக்கழக முன்னாள் மாணவி சனிலா வெலிகெலோத்துக்கு நோபல் பரிசு கிடைத்து உள்ளது. இதன்மூலம் அவர், கோவை வேளாண் பல்கலைக்கழகத்திற்கு பெருமை சேர்த்து உள்ளார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

<u>கருத்தரங்கில் பங்கேற்பு</u>

இந்தநிலையில், 2-வது வேளாண் பட்டதாரி மாணவர்கள் மாநாடு, கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் நாளை(6-ந் தேதி) காலை 9½ மணிக்கு நடைபெற உள்ளது. இதில் நோபல் பரிசு பெற்ற வேளாண் பல்கலைக்கழக முன்னாள் மாணவி சனிலா வெலிகெலோத் கலந்து கொண்டு, பேசுகிறார்.

விழாவில், நாக்பூரில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமத்தின் இயக்குனர் கே.ஆர்.கிராந்தி, துணைவேந்தர் கே.ராமசாமி, சென்னையில் உள்ள தனியார்

நிறுவன தலைவர் ஏ.டி.பத்மசிங் ஐசக் மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள். மாநாட்டு செயலாளர் எம்.பிரகதீஷ் வரவேற்று பேசுகிறார். முதன்மையர் எஸ்.மோகன், சனிலா வெலிகெலோத்தை அறிமுகம் செய்து பேசுகிறார். முடிவில் மாநாட்டு செயலாளர் வி.மீனாட்சி நன்றி கூறுகிறார்.

**குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை தீவிரம் அடைந்தது தென் மாவட்டங்களில் பலத்த மழை பெய்யும் என அறிவிப்பு**




**சென்னை,**

இலங்கை அருகே உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை, வலுப்பெற்று தாழ்வு பகுதியாக மாறி உள்ளது.

இதன்காரணமாக தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் இன்று (திங்கட்கிழமை) சில இடங்களில் பலத்தமழை பெய்யும் என வானிலை மையம் அறிவித்துள்ளது.

<u>அக்னி நட்சத்திரம் தொடங்கியது</u>

தமிழ்நாட்டில் கடந்த வருடம் வடகிழக்கு மழை பொய்த்து போனது. போதிய மழை பெய்யவில்லை. இதனால் இந்த வருடமாவது போதிய அளவுக்கு மழை பெய்யவேண்டும் என்று தமிழக மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இந்த நிலையில் நேற்று கத்திரி வெயில் என்கிற அக்னி நட்சத்திரம் தொடங்கி உள்ளது. அக்னி நட்சத்திரம் இந்த மாதம் 28–ந்தேதி வரை இருக்கிறது.

அக்னி நட்சத்திரம் தொடங்குவதற்கு 10 நாட்களுக்கு முன்பே தமிழ்நாட்டில் வெயில் கொளுத்த தொடங்கியது. பல இடங்களில் வெயில் 100 டிகிரியை தாண்டியது. இதனால் வேலூர், திருச்சி, மதுரை முதலிய இடங்களில் அனல் காற்றுதான் வீசியது. காற்று இல்லாத காரணத்தால் சென்னையில் 100 டிகிரிக்கு குறைவாக அடித்தபோதிலும் வெயிலின் தன்மை மக்களை வாட்டி வதைத்தது.

<u>கோடை மழை</u>

இந்தநிலையில் கடந்த 3 நாட்களாக தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் கோடை மழை பெய்து வருகிறது. அக்னி நட்சத்திரம் தொடங்கியபோதிலும் மழை பெய்துவருவதால் வெயிலின் தன்மை குறைந்துள்ளது.

அக்னி நட்சத்திரத்தின்போது கோடை மழை பலமாக பெய்ததால் வெயில் காலம் என்ற எண்ணமே வராமல் போன வருடங்களும் உண்டு. கன்னியாகுமரி, நெல்லை, தஞ்சை, நாகை, திருவாரூர், பெரம்பலூர் மாவட்டங்களில் கோடை மழை பெய்து வருகிறது. மேலும் தமிழ்நாட்டில் பரவலாக கோடை மழை பெய்து வருகிறது. இதன்காரணமாக தமிழக விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

வானிலை நிலவரம் குறித்து சென்னை வானிலை மைய அதிகாரிகள் கூறியதாவது:–

<u>இன்று மழை பெய்யும்</u>

வங்கக்கடலில் இலங்கைக்கு அப்பால் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி இருந்தது. அது மேற்கு நோக்கி நகர்ந்து வலுப்பெற்று குறைந்த காற்றழுத்த பகுதியாக மாறி இலங்கை அருகே உள்ளது. இதன்காரணமாக தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களில் கடலோர மாவட்டங்களில் இன்று சில இடங்களில் பலத்த மழை பெய்யும். பல இடங்களில் மழைபெய்யும். வடமாவட்டங்களில் சில இடங்களில் மழை பெய்யும்.

நேற்று காலை 8–30மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு வருமாறு:–

<u>7 செ.மீ. மழை</u>

குடவாசல், கமுதி, மைலாடி தலா 7 செ.மீ., பேரையூர், ராஜபாளையம், வத்திராயிருப்பு, பெரியார் தலா 5 செ.மீ., கலவை, கோத்தகிரி, நாகர்கோவில், ராசிபுரம் தலா 4 செ.மீ., வாழப்பாடி, வலங்கைமான், குழித்துறை, பொள்ளாச்சி,திண்டுக்கல், வால்பாறை,போடி நாயக்கனூர் தலா 3 செ.மீ., உத்தமபாளையம், பூதப்பாண்டி, உசிலம்பட்டி, குன்னூர், மன்னார்குடி, மேலூர், கூடலூர், ஸ்ரீவில்லிபுத்தூர், ராதாபுரம், ஆலங்காயம், திருச்சுழி, மேட்டுப்பட்டி, காரைக்குடி, கடலூர், கீரனூர், ஆரணி, அரியலூர், கொடைக்கானல் தலா 2 செ.மீ., திருவாடானை, ஆடுதுறை, பழனி, சின்னக்கள்ளார், தென்காசி, காவேரிப்பாக்கம், தக்கலை,வாடிப்பட்டி, அரண்மனைப்புதூர், நீடாமங்கலம், காமாட்சிபுரம், திருத்தணி, நாங்குனேரி தலா 1 செ.மீ.மழை பெய்துள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**சென்னையில் பல இடங்களில் கன மழை**



**சென்னை,**

தமிழ்நாட்டில் கடந்த வருடம் வடகிழக்கு மழை பொய்த்து போனது. போதிய மழை பெய்யவில்லை. இதனால் இந்த வருடமாவது போதிய அளவுக்கு மழை பெய்யவேண்டும் என்று தமிழக மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.இந்த நிலையில் நேற்று கத்திரி வெயில் என்கிற அக்னி நட்சத்திரம் தொடங்கி உள்ளது. அக்னி நட்சத்திரம் இந்த மாதம் 28–ந்தேதி வரை இருக்கிறது.

கடந்த 3 நாட்களாக தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் கோடை மழை பெய்து வருகிறது. அக்னி நட்சத்திரம் தொடங்கியபோதிலும் மழை பெய்துவருவதால் வெயிலின் தன்மை குறைந்துள்ளது.வங்கக்கடலில் இலங்கைக்கு அப்பால் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி இருந்தது. அது மேற்கு நோக்கி நகர்ந்து வலுப்பெற்று குறைந்த காற்றழுத்த பகுதியாக மாறி இலங்கை அருகே உள்ளது.

இதன்காரணமாக தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களில் கடலோர மாவட்டங்களில் இன்று சில இடங்களில் பலத்த மழை பெய்யும். பல இடங்களில் மழைபெய்யும். வடமாவட்டங்களில் சில இடங்களில் மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

இந்த நிலையில், சென்னையில் இன்று அதிகாலை எழும்பூர், நுங்கம்பாக்கம், அண்ணாசலை கிண்டி, மீனம்பாக்கம் தேனாம்பேட்டை, மற்றும் வேளச்சேரி உள்பட பலபகுதிகளில் கனமழை பெய்து வருகிறது.

**அக்னி நட்சத்திரம் தொடங்கிய நாளில் தமிழகத்தில் பரவலான மழை**



**சென்னை,**

அக்னி நட்சத்திரம் என்று அழைக்கப்படும் ‘கத்தரி’ வெயில் நேற்று தொடங்கியது. இதன் முதல் நாளிலேயே தமிழகத்தில் பரவலான மழை பெய்தது.

<u>அக்னி நட்சத்திரம்</u>

24 நாட்கள் கொண்ட அக்னி நட்சத்திர காலகட்டத்தில் முதல் 8 நாட்கள் மிதமாகவும், அடுத்த 8 நாட்கள் அதிகமாகவும், கடைசி 8 நாட்களில் தணிந்தும் வெயில் காணப்படும்.

'கத்தரி' வெயில் தொடங்கிய முதல் நாளான நேற்று, வெயில் கொடுமை எப்படி இருக்குமோ? என்ற பரிதவிப்பில் மக்கள் இருந்தனர். இந்த நிலையில், நேற்றுமுன்தினம் தென்மேற்கு வங்கக்கடலில் ஏற்பட்ட குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை காரணத்தால் தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் தகவல் தெரிவித்து இருந்தார்.

'திடீர்' மழை

குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக நேற்று காலை தமிழகத்தின் பல மாவட்டங்களில் பரவலாக மழை பெய்து பொதுமக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. சென்னையின் சில பகுதிகளில் நேற்று காலை 6.55 மணியளவில் திடீரென்று லேசான தூறலுடன் மழை பெய்ய தொடங்கியது. சென்னை மாதவரம், கொடுங்கையூர், அண்ணாசாலை, திருவல்லிக்கேணி, எழும்பூர், மெரினா உள்பட நகரின் பல இடங்களில் சுமார் 25 நிமிடம் பெய்த இந்த மழையால் இதமான சூழ்நிலை நிலவியது.

மின்னல் தாக்கி மாணவி பலி

பெரம்பலூர் மாவட்டம் காரியானூர் கிராமத்தை சேர்ந்தவர் கந்தசாமி. இவருடைய மகள் கனகா (வயது 13). இவள் காரியானூர் கிராமத்தில் உள்ள அரசு பள்ளி ஒன்றில் 8–ம் வகுப்பு படித்து வந்தாள். தற்போது கோடை விடுமுறை விடப்பட்டுள்ளதை அடுத்து, அதனை கொண்டாடுவதற்காக விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே மழவராயனூரில் உள்ள தனது அக்காள் மீனா வீட்டுக்கு கடந்த சில நாட்களுக்கு முன்பு வந்தாள்.

மாணவி கனகா, தனது அக்காள் மாமியார் அமிர்தத்துடன் அதே பகுதியில் உள்ள வயல்வெளி பகுதிக்கு நேற்று மாலை 3.30 மணிக்கு சென்றாள். திடீரென இடி–

மின்னலுடன் மழை பெய்தது. அப்போது மின்னல் தாக்கி பரிதாபமாக மாணவி கனகா இறந்தாள்.

கடலூர்

கடலூரில் நேற்று காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக 17.3 மில்லி மீட்டர் மழை பதிவானது. இதனால் பூமி குளிர்ந்து வெப்பம் ஓரளவு தணிந்தது.

இதேபோல் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பரவலாக கோடை மழை பெய்தது. பண்ருட்டியில் காலை 8 மணிக்கு வானத்தில் கருமேகங்கள் சூழ்ந்து திடீரென பலத்த மழை பெய்தது.

சேலத்தில் லேசான மழை

நேற்று மதியம் சுமார் 3.30 மணியளவில் சேலத்தில் பல இடங்களில் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. அதைத்தொடர்ந்து சேலம் புதிய மற்றும் பழைய பஸ்நிலையம், அஸ்தம்பட்டி, சூரமங்கலம், திருச்சி ரோடு, அம்மாபேட்டை, கொண்டலாம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் லேசான மழை பெய்தது. இந்த மழை 10 முதல் 15 நிமிடம் மட்டுமே நீடித்தது.

நெல்லை

நெல்லையில் நேற்று மாலை 4 மணி அளவில் நெல்லை சந்திப்பு, பாளையங்கோட்டை பகுதிகளில் 15 நிமிடங்கள் சாரல் மழை பெய்தது.

நெல்லை மாவட்டத்தின் முக்கிய சுற்றுலா தலமான குற்றாலத்தில், கடந்த சில நாட்களாக பெய்த மழையால் அருவியில் தண்ணீர் விழுந்து வருகிறது. நேற்று முன்தினம் தென்காசி, குற்றாலம் மலை பகுதிகளில் பலத்த மழை பெய்தது. இதனால் நேற்று காலை முதல் குற்றாலம் அருவிகளில் தண்ணீர் வரத்து அதிகரித்தது. மெயின் அருவி, ஐந்தருவி, பழைய குற்றாலம் அருவிகளில் தண்ணீர் அதிகளவில் விழுந்தது.

செங்கோட்டை பகுதியில் நேற்று மாலை 4.15 மணிமுதல் 5 மணிவரை இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது. இதனால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. இதே போல் அம்பை, விக்கிரமசிங்கபுரம், முக்கூடல் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் பலத்த மழை பெய்தது. மழை சுமார் ½ மணி நேரம் நீடித்தது.

இதனால் சாலைகளில் ஆங்காங்கே மழைநீர் வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடியது. இந்த கோடை மழையால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். கடையம், கடையநல்லூர் உள்ளிட்ட பகுதிகளில் லேசான சாரலுடன் மிதமான மழை பெய்தது.

தூத்துக்குடியில் பலத்த காற்று

தூத்துக்குடியில் மதியம் 2 மணி அளவில் கருமேகங்கள் திரண்டு நின்றன. இதனால் தூத்துக்குடி நகரமே சற்று நேரம் இருண்டு காணப்பட்டது.

சற்று நேரத்தில் சுமார் 54 கிலோ மீட்டர் வேகத்தில் சூறைக்காற்று வீசியது. பகல் 2.30 மணி அளவில் மழை பெய்ய ஆரம்பித்தது. சுமார் 15 நிமிடங்கள் மழை பெய்தது.

குமரி மாவட்டம்

குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக மழை தொடர்ந்து பெய்து வருகிறது. இந்த நிலையில் அக்னி நட்சத்திரம் நேற்று தொடங்கியது. அக்னி நட்சத்திரம் தொடங்கிய முதல் நாளான நேற்று காலை நாகர்கோவிலில் வெயில் அடித்தது. பகல் 1.15 மணி அளவில் பெய்ய தொடங்கிய மழை சுமார் ஒரு மணி நேரம் வரை நீடித்தது.

இதே போல் கன்னியாகுமரி, மார்த்தாண்டம், களியக்காவிளை, குலசேகரம், குருந்தன்கோடு, வெள்ளிமலை உள்பட மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. இதனால் சாலைகளில் தண்ணீர் வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடியது.

திற்பரப்பு பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், குமரி குற்றாலம் என்று அழைக்கப்படும் அருவியில் அதிக அளவில் தண்ணீர் கொட்டியது. நேற்று

விடுமுறை தினம் என்பதால் அருவியில் ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்தனர். இவர்கள் அருவி நீரில் ஆனந்தமாக குளியலிட்டு மகிழ்ந்தனர்.

**நெல்லை–தூத்துக்குடி மாவட்டங்களில் பரவலாக மழை குற்றாலம் அருவிகளில் நீர்வரத்து அதிகரிப்பு**



**நெல்லை,**

நெல்லை – தூத்துக்குடி மாவட்டங்களில் பரவலாக மழை பெய்தது. இதன் காரணமாக குற்றாலம் அருவிகளில் நீர்வரத்து அதிகரித்து உள்ளது.

<u>நெல்லையில் மழை</u>

கோடை காலத்தின் உச்சகட்டமாக கருதப்படும் அக்னி நட்சத்திரம் தொடங்கி நேற்று தொடங்கியது. ஆனால், வெயிலின் தாக்கத்தை குறைக்கும் வகையில் சில நாட்களாக ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. நேற்றும் பல இடங்களில் மழை பெய்தது.

நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் வெயில் கடுமையாக இல்லை. பெரும்பாலான இடங்களில் வானம் மேகமூட்டமாக இருந்தது. பல இடங்களில் லேசான மழையும், சில இடங்களில் பலத்த மழையாகவும் பெய்தது. நேற்று மாலை 4 மணி அளவில் நெல்லை சந்திப்பு, பாளையங்கோட்டை பகுதிகளில் 15 நிமிடங்கள் சாரல் மழை பெய்தது.

<u>அருவியில் நீர்வரத்து</u>

நெல்லை மாவட்டத்தின் முக்கிய சுற்றுலா தலமான குற்றாலத்தில், கடந்த சில நாட்களாக பெய்த மழையால் அருவியில் தண்ணீர் விழுந்து வருகிறது. நேற்று முன்தினம் தென்காசி, குற்றாலம் மலை பகுதிகளில் பலத்த மழை பெய்தது. இதனால் நேற்று காலை முதல் குற்றாலம் அருவிகளில் தண்ணீர் வரத்து அதிகரித்தது. மெயின் அருவி, ஐந்தருவி, பழைய குற்றாலம் அருவிகளில் தண்ணீர் அதிகளவில் விழுந்தது.

தற்போது மாணவர்களுக்கு கோடை விடுமுறை என்பதால், சுற்றுலா பயணிகள் கூட்டம் குற்றாலத்தில் அதிகரித்து வருகிறது. அருவிகளில் தண்ணீர் நன்றாக விழுந்ததால் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி அடைந்து, உற்சாகமாக குளித்தனர்.

<u>பலத்த மழை</u>

செங்கோட்டை பகுதியில் மாலை 4.15 மணிமுதல் 5 மணிவரை இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது. இதனால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. இதே போல் அம்பை, விக்கிரமசிங்கபுரம், முக்கூடல் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் பலத்த மழை பெய்தது. மழை சுமார் ½ மணி நேரம் நீடித்தது.

இதனால் சாலைகளில் ஆங்காங்கே மழைநீர் வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடியது. இந்த கோடை மழையால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். கடையம், கடையநல்லூர் உள்ளிட்ட பகுதிகளில் லேசான சாரலுடன் மிதமான மழை பெய்தது.

<u>தூத்துக்குடியில் பலத்த காற்று</u>

தூத்துக்குடியில் காலை முதல் வெயிலே இல்லை. வானம் மேகமூட்டமாக காணப்பட்டது. பகல் 11.20 மணி அளவில் லேசான சாரல் மழை தூறியது. சாலையை மட்டும் நனைத்த இந்த சாரல் மழை, 10 நிமிடங்கள் மட்டுமே நீடித்தது. அதன் பின்னர் அவ்வப்போது தூறிக் கொண்டே இருந்தது. மதியம் 2 மணி அளவில் கருமேகங்கள் திரண்டு நின்றன. இதனால் தூத்துக்குடி நகரமே சற்று நேரம் இருண்டு காணப்பட்டது.

இதற்கிடையே கிழக்கு, தென்கிழக்கு பகுதியில் இருந்து வடக்கு, வடகிழக்கு பகுதியை நோக்கி சுமார் 54 கிலோ மீட்டர் வேகத்தில் சூறைக்காற்று வீசியது. பகல் 2.30 மணி அளவில் மழை பெய்ய ஆரம்பித்தது. சுமார் 15 நிமிடங்கள் மழை பெய்தது. இந்த மழையால் ரோட்டில் ஆங்காங்கே உள்ள பள்ளங்களில் மழைநீர் தேங்கி நின்றது. தொடர்ந்து இடைஇடையே லேசாக மழை தூறிக் கொண்டே இருந்தது.

மொத்தத்தில் தூத்துக்குடி நகரம் முழுவதும் வெப்பம் இல்லாமல் குளிர்ச்சியாக இருந்தது. இதமான சூழல் நிலவியதால் பொதுமக்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர்.

**ஐரோப்பாவில் மாம்பழம் இறக்குமதிக்கு தடை உலக வர்த்தக அமைப்பிடம் புகார் செய்ய இந்தியா திட்டம்**



**புதுடெல்லி,**

ஐரோப்பிய நாடுகள் இந்தியாவில் இருந்து மாம்பழம் இறக்குமதி செய்ய தற்காலிக தடை விதித்துள்ளன. இந்த தடையை நீக்கவில்லையென்றால் உலக வர்த்தக அமைப்பிடம் புகார் செய்ய உள்ளதாக இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் ஆனந்த் சர்மா தெரிவித்துள்ளார்.

**பரிசோதனை கூடங்கள்**

அவர் மேலும் கூறியதாவது–

வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு பொருள்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் வாயிலாக நாடு முழுவதும் உலக தரம் வாய்ந்த பரிசோதனை கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாணையம் வழங்கும் தரச் சான்றிதழை ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா மற்றும் இதர நாடுகள் அங்கீகரித்துள்ளன. இந்நிலையில், ஐரோப்பிய நாடுகள் எவ்வித ஆலோசனையும் செய்யாமல் தன்னிச்சையாக இறக்குமதிக்கு தடை விதித்துள்ளன. இதன் காரணமாக இரு தரப்பிற்கும் இடையிலான வர்த்தக உறவில் எதிர்மறையான விளைவுகள் ஏற்படும். இது குறித்து ஏற்கனவே ஐரோப்பிய ஒன்றியத்தின் வர்த்தக ஆணையருக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார். கடந்த 2013–ஆம் ஆண்டில் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மாம்பழம் மற்றும் சில காய்கறிகளில் பூச்சித் தொற்று இருந்ததால் தற்போது அந்நாடுகள் இந்தியாவில் இருந்து இவற்றை இறக்குமதி செய்ய மே 1–ந் தேதி முதல் 2015 டிசம்பர் வரை தடை விதித்துள்ளன.

**முதலிடம்**

சர்வதேச அளவில் மாம்பழம் ஏற்றுமதியில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. ஆண்டுக்கு சராசரியாக 70,000 டன் மாம்பழ வகைகள் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்தியாவில் இருந்து இங்கிலாந்துக்கு அதிகளவில் மாம்பழம் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

**நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 11 காசுகள் உயர்வு 311 காசுகளாக நிர்ணயம்**



**நாமக்கல்,**

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை நேற்று ஒரே நாளில் 11 காசுகள் உயர்ந்து, 311 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

முட்டை விலை உயர்வு

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை கடந்த சில நாட்களாக 300 காசுகளாக நீடித்து வந்தது. இந்த நிலையில் நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டை கொள்முதல் விலையை அதிரடியாக 11 காசுகள் உயர்த்த முடிவு செய்தனர்.

எனவே முட்டை கொள்முதல் விலை 311 காசுகளாக உயர்ந்து உள்ளது.

பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:– சென்னை–335, ஐதராபாத்–283, விஜயவாடா, தனுகு–280, பார்வாலா–257, மும்பை–321, மைசூர்–307, பெங்களூர்–320, கொல்கத்தா–327, டெல்லி–267.

காரணம் என்ன?

ஆழ்கடலில் மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டு உள்ளதால், தமிழகம் மற்றும் கேரளாவில் முட்டையின் விற்பனை அதிகரித்து உள்ளது. அதேசமயம் பிற மண்டலங்களிலும் முட்டை விலை ‘கிடுகிடு’ என உயர்ந்து வருகிறது.

அதற்கு தகுந்தாற்போல் நாமக்கல் மண்டலத்திலும் முட்டையின் விலை அதிகரிக்கப்பட்டு உள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

கோடை வெப்பம் காரணமாக முட்டையின் உற்பத்தி ஏறத்தாழ 10 சதவீதம் வரை குறைந்து இருப்பதும் விலை உயர்வுக்கு ஒரு காரணம் என கூறப்படுகிறது.

முட்டைக்கோழி கிலோ ரூ.50–க்கும், கறிக்கோழி கிலோ ரூ.75–க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அவற்றின் விலையில் மாற்றம் செய்யப்படவில்லை.

**கோபி வேளாண்மை விற்பனை சங்கத்தில் ரூ.8½ லட்சத்துக்கு வாழைப்பழம் ஏலம்**



**கோபிசெட்டிபாளையம்,**

கோபி வேளாண்மை விற்பனை சங்கத்தில் ரூ.8½ லட்சத்துக்கு வாழைப் பழம் ஏலம் போனது.

வாழைப்பழத்தார் ஏலம்

கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரந்தோறும் புதன்கிழமை மற்றும் சனிக்கிழமைகளில் வாழைப்பழம் ஏலம் நடைபெறுவது வழக்கம்.

அதுபோல் நேற்று முன்தினம் நடந்த ஏலத்திற்கு கோபிசெட்டிபாளையம் மற்றும் அதன்சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த விவசாயிகள் 9 ஆயிரம் வாழைப்பழத்தார்களை கொண்டு வந்து இருந்தனர்.

இதில் கதலி ரக வாழைப்பழம் கிலோ 35 ரூபாய்க்கும், நேந்திரன் ரகம் கிலோ 23 ரூபாய்க்கும் விற்பனை ஆனது.

இதேபோல் செவ்வாழை தார் ஒன்று ரூ.600-க்கும், ரொபஸ்டா (தார்) ரூ.300-க்கும், தேன்வாழை (தார்) ரூ.350-க்கும், ரஸ்தாளி (தார்) ரூ.350-க்கும், மொந்தன் (தார்) ரூ.250-க்கும், பூவன் (தார்) ரூ.425-க்கும், பச்சைநாடன் (தார்) ரூ.200-க்கும் விற்பனை ஆனது. மொத்தம் வாழைப்பழங்கள் ரூ.8½ லட்சத்துக்கு ஏலம் போனது.

இந்த வாழைப்பழங்களை திருப்பூர், பெருந்துறை, ஊத்துக்குளி ஆகிய பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் வாங்கிச்சென்றனர்.

தேங்காய்

இதேபோல் நடந்த தேங்காய் ஏலத்திற்கு விவசாயிகள் 11 ஆயிரம் தேங்காய்களை விற்பனைக்காக கொண்டு வந்து இருந்தனர். இதில் தேங்காய் ஒன்று குறைந்தபட்ச விலையாக 7 ரூபாய் 50 காசுக்கும், அதிகபட்ச விலையாக 15 ரூபாய்க்கும் விற்பனை ஆனது. மொத்தம் ரூ.1 லட்சத்து 6 ஆயிரத்துக்கு தேங்காய் ஏலம் போனது.

**கடந்த 2013–14–ஆம் நிதி ஆண்டில் வேளாண் விளைபொருள்கள் ஏற்றுமதி 4,500 கோடி டாலராக உயர்வு**



கடந்த 2013–14–ஆம் நிதி ஆண்டில் வேளாண் விளைபொருள்கள் ஏற்றுமதி 4,500 கோடி டாலராக உயர்ந்துள்ளது. 2011–12–ஆம் நிதி ஆண்டில் 2,500 கோடி டாலர் அளவிற்கே வேளாண் விளைபொருள்கள் ஏற்றுமதியாகி இருந்தன.

விவசாயிகளின் ஒட்டுமொத்த முயற்சிகள், அரசின் கொள்கைகள் மற்றும் வர்த்தக பிரிவினரின் ஆர்வம் போன்ற காரணங்களால் சென்ற நிதி ஆண்டில் ஏற்றுமதி அதிகரித்துள்ளது. விவசாயிகளின் மொத்த லாப வரம்பு உற்பத்தி செலவினத்தில் 50 சதவீதத்திற்கும் மேல் அதிகரித்துள்ளது. முக்கிய வேளாண் விளைபொருள்களுக்கான குறைந்த பட்ச ஆதாய விலையை மத்திய அரசு அதிகரித்து வந்ததே இதற்கு காரணம் என விவசாய செலவினம் மற்றும் விலை அமைப்பு தெரிவித்துள்ளது. ஏற்றுமதி அதிகரித்துள்ளதால் இவர்களின் வருவாய் அதிகரித்துள்ளது.

**பெருந்துறை வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் ரூ.1 கோடிக்கு கொப்பரை தேங்காய் ஏலம்**



**பெருந்துறை,**

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.1 கோடிக்கு கொப்பரை தேங்காய் ஏலம் விடப்பட்டது.

**கொப்பரை தேங்காய் ஏலம்**

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று கொப்பரை தேங்காய் ஏலம் நடந்தது.

இந்த ஏலத்துக்கு விவசாயிகள் 2 ஆயிரத்து 23 மூட்டைகளில் 98 ஆயிரம் கிலோ கொப்பரை தேங்காய்களை விற்பனைக்காக கொண்டு வந்து இருந்தனர்.

இதில் முதல் தரம் கொப்பரை தேங்காய் கிலோ குறைந்தபட்ச விலையாக 101 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 105 ரூபாய் 15 காசுக்கும் ஏலம் விடப்பட்டது.

2-ம் தரம் கொப்பரை தேங்காய் கிலோ குறைந்தபட்ச விலையாக 50 ரூபாய் 85 காசுக்கும், அதிகபட்ச விலையாக 100 ரூபாய் 85 காசுக்கும் ஏலம் போனது. கொப்பரை தேங்காய் ரூ.1 கோடிக்கு விற்பனை ஆனது.

இந்த விலை கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தை விட கிலோவுக்கு 1 ரூபாய் குறைந்தது.

**தேங்காய் விற்பனை**

பெருந்துறை வாரச்சந்தையில் விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் தேங்காய் நேரடி விற்பனை நடைபெற்றது. இதற்கு பெருந்துறை மற்றும் சுற்றுப்புற பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 1 லட்சத்து 50 ஆயிரம் தேங்காய்களை கொண்டு வந்து இருந்தனர். இதில் முதல் தரம் தேங்காய் ஒன்று 13 ரூபாய் முதல் 15 ரூபாய் வரை விற்பனை ஆனது. 2-ம் தரம் தேங்காய் 11 ரூபாய் முதல் 12 ரூபாய் வரையும், 3-ம் தரம் தேங்காய் 8 ரூபாய் முதல் 10 ரூபாய் வரையும் விற்பனை ஆனது. மொத்தம் தேங்காய் ரூ.18 லட்சத்துக்கு விற்பனை செய்யப்பட்டது.

**அக்னி நட்சத்திரம் தொடக்க நாளில் வானில் திரண்ட கருமேகங்களுடன் மக்களை ஏமாற்றிய மழை**



**தஞ்சாவூர்,**

அக்னி நட்சத்திரம் தொடக்க நாளான நேற்று தஞ்சையில் மழை பெய்வது போல வானில் கருமேகங்கள் திரண்டன. ஆனால் சிறிது நேரத்தில் இந்த மேகங்கள் கலைந்து வெயில் அடிக்க தொடங்கியது. இதனால் மழை பெய்யும் என எதிர்பார்த்திருந்த மக்கள் ஏமாற்றம் அடைந்தனர்.

<u>மழை தூறல்</u>

தஞ்சையில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால் பகல் நேரங்களில் வீட்டை விட்டு வெளியே வருவதற்கே பொதுமக்கள் அச்சப்படுகின்றனர். அப்படியே

வெளியே வந்தாலும் குடையை பிடித்து கொண்டு தான் வருகின்றனர். சிலர் சாலையில் நடக்கும்போது துணியால் தலையை மூடிக் கொண்டு செல்கின்றனர்.

மின்விசிறிக்கு கீழே அமர்ந்திருந்தாலும் வெப்பகாற்று தான் வீசுகிறது. பகலில் தான் வெயிலின் கொடுமை இருக்கிறது என்றால் இரவிலும் வெப்பத்தின் தாக்கம் அதிக அளவு இருக்கிறது. வெயிலின் தாக்கத்தினால் இளநீர், தர்ப்பூசணி, நுங்கு விற்பனை தஞ்சையில் அமோகமாக நடைபெற்று வருகிறது. கோடை வெயிலின் உச்சகட்டமான கத்திரி வெயில் எனப்படும் அக்னிநட்சத்திரம் நேற்று தொடங்கியது. ஆனால் நேற்றுமுன்தினம் தஞ்சையில் பரவலாக மழை பெய்தது. இதனால் வெப்பம் தணிந்து, குளிர்ச்சியாக இருந்ததால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். அக்னி நட்சத்திர காலத்திலும் மழை பெய்ய வேண்டும் என பொதுமக்கள் எதிர்பார்த்தனர்.

<u>ஏமாற்றிய மழை</u>

அதன்படி அக்னி நட்சத்திரம் தொடங்கிய முதல்நாளான நேற்றுகாலை தஞ்சையில் மழைமேகம் திரண்டு வந்தது. இதனால் மழை பெய்யும் என பொதுமக்கள் எதிர்பார்ப்புடன் இருந்தனர். ஆனால் லேசாக மழைதூறி நின்றதுடன் மழைமேகமும் கலைந்து விட்டது.

பலத்த மழை பெய்யும் என எதிர்பார்த்த பொதுமக்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. பின்பு வழக்கம்போல் வெயில் அடிக்கத் தொடங்கியது. ஆனால் மற்ற நாட்களை விட அக்னி நட்சத்திரம் தொடங்கிய முதல்நாளான நேற்று தஞ்சையில் வெயிலின் அளவு குறைவாக தான் இருந்தது. முன்னதாக நேற்றுகாலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் பெய்த மழைஅளவு மில்லிமீட்டரில் வருமாறு:-

குடவாசல்-72.6, வலங்கைமான்-30.2, பாபநாசம்-26.2, மன்னார்குடி-22, பூதலூர்-21.4, மஞ்சலாறு-19.6, முள்ளியாறு-18.2, அணைக்கரை-17, மதுக்கூர்-17, நீடாமங்கலம்-10.3, கோரையாறு-7.2, வல்லம்-5.8, முத்துப்பேட்டை-5, ஒரத்தநாடு-4.6, தஞ்சை-3.2, நெய்வாசல்தென்பாதி-1.8,

**திருவாரூர் மாவட்டத்தில் பரவலாக மழை விவசாயிகள் மகிழ்ச்சி**



**மன்னார்குடி,**

அக்னி நட்சத்திரம் இன்று தொடங்க உள்ள நிலையில் நேற்று திருவாரூர் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. இதனால் கோடை சாகுபடி செய்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**கோடைகாலம்**

கோடைகாலம் தொடங்கியது முதல் திருவாரூர் மாவட்டத்தில் வெயிலின் தாக்கம் அதிகமாக காணப்பட்டு வருகிறது. இதனால் மக்கள் கடும் அவதிப்பட்டு வந்தனர். இந்த நிலையில் கத்திரி வெயில் எனப்படும் அக்னி நட்சத்திரம் இன்று தொடங்குகிறது. இந்த நிலையில் கடந்த சில நாட்களாக மாவட்டத்தில் வெயிலின் தாக்கம் சற்று தணிந்து காணப்பட்டது. திருவாரூரில் கடந்த 30-ந் தேதி அரை மணிநேரம் மழை பெய்தது. அதன் தொடர்ச்சியாக நேற்று வலங்கைமான், நீடாமங்கலம், மன்னார்குடி, கோட்டூர், முத்துப்பேட்டை பகுதிகளில் மழை பெய்தது.

**மழை பெய்தது**

மன்னார்குடி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் பெய்த மழை தொடர்ந்து ஒரு மணி நேரம் நீடித்தது. இதனால் மன்னார்குடி நகரில் ஆங்காங்கே சில பகுதிகளில் தண்ணீர் தேங்கி நின்றது. இதேபோல் கோட்டூர் மற்றும் அதை சுற்றி

உள்ள விக்கிரபாண்டியம், களப்பால், வாட்டார் உள்ளிட்ட பகுதிகளிலும் மழை பெய்தது.

திருமக்கோட்டை மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங்களில் நேற்று மதியம் 2 மணி நேரம் இடைவிடாது மழை பெய்தது. இதனால் ஆங்காங்கே வெள்ளம் தேங்கி நின்றது. முத்துப்பேட்டையில் நேற்று மாலை 6 மணி அளவில் பெய்ய தொடங்கிய மழை அரை மணி நேரம் நீடித்தது.

**விவசாயிகள் மகிழ்ச்சி**

கோடைமழை பெய்ததையொட்டி திருவாரூர் மாவட்டப்பகுதிகளில் வெயில் தணிந்து காணப்பட்டது பொதுமக்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. அதே நேரத்தில் மின் மோட்டார் பாசனத்தை மட்டுமே நம்பி கோடை சாகுபடியில் ஈடுபட்டு வரும் விவசாயிகள், நெல் பயிர்களுக்கு ஊக்கமளிக்கும் விதத்தில் பெய்த இந்த மழை தொடர்ந்து பெய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். நேற்று பெய்த மழை பல மாதங்களாக தண்ணீர் இன்றி காய்ந்த தென்னை மரங்களுக்கு மிகுந்த பலன் அளிக்கும் என்று முத்துப்பேட்டை பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

**புதுச்சேரியில் கத்திரி வெயில் தொடங்கிய நாளில் மழை கொட்டியது**



**புதுச்சேரி,**

புதுவையில் கத்திரி வெயில் தொடங்கிய நாளில் மழை கொட்டியதால் மக்கள் ஆனந்த மடைந்துள்ளனர்.

<u>கத்திரி வெயில்</u>

கோடைக்காலம் தொடங்கிய நிலையில் புதுச்சேரியில் கடந்த சில நாட்களாக வெயில் வாட்டி எடுத்து வந்தது.

பகல் பொழுதில் வெளியில் தலைகாட்ட முடியாத அளவுக்கு கொளுத்திய வெயில் காரணமாக பொதுமக்கள் மிகுந்த கவலையில் ஆழ்ந்திருந்தனர்.

கத்திரி வெயில் தொடங்கினால் (அக்னி நட்சத்திரம்) அடுத்துவரும் 24 நாட்களும் வெயிலின் கொடுமையை தாங்கமுடியாதே என்று எண்ணியிருந்தனர்.

ஆனால் கத்திரி வெயிலின் தொடக்க நாளான நேற்று பொதுமக்களின் எதிர்பார்ப்புக்கு நேர்மாறான நிலைமை இருந்தது.

<u>மழை பெய்தது</u>

நேற்று காலை முதலே வானத்தில் மேகங்கள் கூட்டம் கூட்டமாக பவனி வந்தன. காலை 7மணி அளவில் இடி, மின்னலுடன் மழை கொட்ட தொடங்கியது. சுமார் 30நிமிடம் இந்த மழை நீடித்தது.

இந்த மழை காரணமாக வெப்பம் தணிந்து இதமான சூழல் நிலவியது. இந்த நிலை பிற்பகல் வரை நீடித்தது. பிற்பகலுக்கு மேல் வெயில் தலைகாட்டியது.

எனினும் பகலில் பெய்த மழை காரணமாக வெயிலின் தாக்கம் பெரிய அளவில் உணரப்படவில்லை.

கோடையில் குளிர்வித்த மழையினால் பொதுமக்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர்.

**அக்னி நட்சத்திரம் தொடங்கிய முதல் நாளில் கடலூர் மாவட்டத்தில் பரவலாக இடி–மின்னலுடன் மழை**



கடலூர்,

அக்னி நட்சத்திரம் தொடங்கிய முதல் நாளில் கடலூர் மாவட்டத்தில் பரவலாக இடி–மின்னலுடன் மழை பெய்தது. இதனால் பூமி குளிர்ந்து வெப்பம் தணிந்தது.

<u>அக்னி நட்சத்திரம்</u>

கோடைகாலம் வந்து விட்டாலே வெயில் வாட்டி வதைக்க தொடங்கி விடும். அதிலும் கத்திரி வெயில் அன்று அழைக்கப்படும் அக்னி நட்சத்திர காலம் என்றால் வெயிலின் தாக்கம் கடுமையாக இருக்கும்.

அந்த வகையில் இந்த ஆண்டுக்கான அக்னி நட்சத்திரம் நேற்று தொடங்கியது. இந்நிலையில், தென்மேற்கு வங்க கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி இருப்பதாகவும், இதனால் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பரவலாக மழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்து இருந்தது.

அக்னி நட்சத்திரம் தொடங்கும் நாளான நேற்று மழை பெய்யும் என்ற வானிலை ஆய்வு மையத்தின் அறிவிப்பு கடலூர் மக்களுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. என்றாலும் கடலூரில் மழை பெய்யுமா? அல்லது வேறு பகுதிக்கு இடம் பெயர்ந்து செல்லுமா? என்ற சந்தேகம் மக்கள் மனதில் இருந்தது.

<u>திடீர் மழை</u>

இதையடுத்து நேற்று காலையில் வானத்தில் கருமேகங்கள் திரண்டு மழை பெய்வதற்கான அறிகுறிகள் தென்பட்டன. காலை 6.15 மணியளவில் இடி–மின்னலுடன் திடீரென மழை பெய்தது. முதலில் பன்னீர் தெளிப்பது போன்று தூறிய மழை நேரம் செல்ல, செல்ல கன மழையாக வெளுத்து கட்டியது. சுமார் 30 நிமிடங்கள் பெய்த இந்த மழையால் சாலை மற்றும் தெருக்களில் வழிந்தோடிய மழைநீர் தாழ்வான பகுதிகளில் தேங்கி நின்றது.

கடலூரில் நேற்று காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக 17.3 மில்லி மீட்டர் மழை பதிவானது. இதனால் பூமி குளிர்ந்து வெப்பம் ஓரளவு தணிந்தது. ஆனால் இது தொடர்ந்து நீடிக்கவில்லை. காலை 10 மணிக்கு பிறகு வெயில் சுட்டெரிக்க தொடங்கியது. இருப்பினும், இவ்வளவு நாட்களாக வாட்டி வதைத்த வெயிலை பார்த்து மக்கள் மத்தியில் நேற்று பெய்த லேசான மழை கண்களுக்கு விருந்தளிப்பது போல இருந்தது.

பண்ருட்டி

இதேபோல் கடலூர் மட்டுமின்றி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பரவலாக கோடை மழை பெய்தது. பண்ருட்டியில் காலை 8 மணிக்கு வானத்தில் கருமேகங்கள் சூழ்ந்து திடீரென பலத்த மழை பெய்தது. சுமார் 20 நிமிடங்கள் இந்த மழை நீடித்த இந்த மழையால் பண்ருட்டியில் உள்ள முக்கிய சாலைகளில் மழைநீர் வழிந்தோடி பள்ளமான பகுதிகளில் தேங்கி நின்றது.

விருத்தாசலம்

விருத்தாசலம் பகுதியில் நேற்று காலை 7 மணி முதல் கனமழையாக கொட்டியது. பின்னர், வழக்கம் போல் வெயில் அடிக்க தொடங்கியது. இந்நிலையில், மதியம் 11.30 மணிக்கு மேல் மீண்டும் மழை பெய்ய தொடங்கியது. இதனால் விருத்தாசலம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் வெளியே அடுக்கி வைக்கப்பட்டிருந்த சுமார் 50–க்கும் மேற்பட்ட நெல் மூட்டைகள் நனைந்து சேதமானது. சிதம்பரம், காட்டுமன்னார்கோவில், புவனகிரி பகுதிகளிலும் லேசான சாரல் மழை நேற்று பெய்தது. இதனால் பொது மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**செஞ்சி பகுதிகளில் கேழ்வரகு சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்**



**செஞ்சி,**

செஞ்சி பகுதிகளில் கேழ்வரகு சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**கேழ்வரகு சாகுபடி**

கிராமங்களில் கேழ்வரகு கூழ் சாப்பிடும் பழக்கம் இருந்த காலங்களில் நெல் பயிருக்கு இணையாக கேழ்வரகு பயிர் செய்யப்பட்டது. அந்த காலத்தில் வசதி படைத்த வர்களும் கிராமங்களில் ஒரு வேளை உணவாக கேழ்வரகு கூழ் சாப்பிட்டு வந்தனர். தற்போதும் சிலர் ஒரு வேளை உணவாக கூழ் சாப்பிடும் வேளையில் காலையில் டிபன், மற்ற 2 வேளைகளில் அரிசி சாதம் என மக்கள் மாறி விட்ட சூழ்நிலையில் தற்போது மீண்டும் நகரங்களில் சாலை யோரங்களில் தள்ளுவண்டி களில் கேழ்வரகு கூழ் விற்பனை அமோகமாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் கேழ்வரகு பயிர் செய்வது குறைந்து விட்ட நிலையில் கிராமங்களில் விவசாயிகள் மீண்டும் கேழ்வரகு பயிர் செய்ய முன் வந்துள்ளனர். இதற்கு நெல் பயிருக்கு பாய்ச்சுவது போன்று தண்ணீர் பாய்ச்ச வேண்டிய அவசியமில்லை. வாரம் ஒருமுறை தண்ணீர் பாய்ச்சினாலே போதும்.

இதனால் செஞ்சி, ஒட்டம் பட்டு மற்றும் அதனை சுற்றி யுள்ள பகுதிகளில் பெரும் பாலான விவசாயிகள் தங்கள் நிலங்களில் கேழ்வரகை அதிகளவில் பயிர் செய்துள் ளனர். இவை நன்றாக விளைந் தால் ஒரு ஏக்கருக்கு 10 மூட்டை வரை விளைச்சல்

கிடைக்கும். தற்போது சந்தையில் 100 கிலோ எடை கொண்ட ஒரு மூட்டை கேழ் வரகு ரூ.2,300-ல் இருந்து ரூ.2,500 வரை நல்ல விலை போவதால் தற்போது கேழ்வரகு பயிர் செய்வதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**அறந்தாங்கி பகுதியில் இடி, மின்னலுடன் பலத்த மழை பொதுமக்கள் மகிழ்ச்சி**




**அறந்தாங்கி,**

அறந்தாங்கி பகுதியில் இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது. இதனால் வெப்பம் தணிந்ததால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**இடி, மின்னலுடன் பலத்த மழை**

அறந்தாங்கி பகுதியில் கடந்த இரண்டு ஆண்டு களாகவே போதுமான மழை பெய்யாத காரணத்தால், இப் பகுதியில் உள்ள நீர்நிலைகள் வறண்டு கிடக்கின்றன.

நீர் நிலைகளில் தண்ணீர் இல்லாத காரணத் தால் அறந்தாங்கி நகர் உள் ளிட்ட பகுதிகளில் அதிக அளவு வெப்பம் நிலவி வரு கிறது.

இந்நிலையில் நேற்று முன் தினம் நள்ளிரவு வானில் திடீரென்று கருமேகங்கள் திரண்டன. இதைத்தொடர்ந்து இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது. சுமார் 1 மணி நேரம் பெய்த பலத்த மழையின் காரணமாக, அறந்தாங்கி நகரின் சாலைகளில் மழை நீர் வெள்ளம்போல் பெருக் கெடுத்து ஓடியது.

<u>பொதுமக்கள் மகிழ்ச்சி</u>

மேலும் அறந்தாங்கி பஸ் நிலையம், அண்ணாசிலை, கட்டு மாவடி முக்கம், பெரிய கடைவீதி, பாரதிதாசன் தெரு, பட்டுக்கோட்டை சாலை உள்ளிட்ட நகரின் தாழ் வான பகுதிகளில் மழைநீர் தேங்கி யது. இந்த மழையால் நீர் நிலைகள் எதுவும் நிரம்ப வில்லை. இருப்பினும் இன்று (ஞாயிற்றுக்கிழமை) கத்திரி வெயில் தொடங்க உள்ள நிலையில் நேற்று முன்தினம் பெய்த மழையால், அறந்தாங்கி பகுதியில் வெப்பத்தின் தாக்கம் வெகுவாக குறைந்துள் ளது. இதனால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். இந்த மழையைப் பயன்படுத்தி அறந்தாங்கி பகுதி விவசாயிகள் தங்கள் நிலங்களில் கோடை உழவு செய்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**அரியலூர் மாவட்டத்தில் பரவலாக பெய்த மழை**



**அரியலூர்,**

அரியலூர் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது.

<u>திடீர் மழை</u>

தற்போது கோடை வெயில் வறுத்து எடுத்து வருகிறது. இன்று (ஞாயிற்றுக்கிழமை) முதல் அக்னி நட்சத்திரம் ஆரம்பமாகிறது. இந்த நாட்களில் வெயிலின் தாக்கம் கடுமையாக இருப்பது வழக்கம். இந்த நிலையில் நேற்று மதியம் 2 மணி அளவில் திடீரென அரியலூரில் வானம் கறுத்தது. பின்னர்திடீரென இடியுடன் கூடிய மழை

பெய்தது. இந்த மழை சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக நீடித்தது. இதனால் கோடை வெப்பம் தணிந்து மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## செந்துறை

இதே போல் செந்துறை, மீன்சுருட்டி, ஜெயங்கொண் டம் குறுக்கு ரோட்டில் நல்ல மழை பெய்தது. குண்டவெளி என்ற இடத்தில் மின்னல் தாக்கி தென்னை மரம் விழுந்தது. இதனால் உயிர் சேதம் ஏதும் இல்லை. பொதுவாக மாவட்டம் முழுவதும் நல்ல மழை பெய்தது.

## கொடைக்கானல் கீழ்மலை பகுதிகளில் பலாப்பழம் விற்பனை அமோகம் சுற்றுலா பயணிகள் வாங்கி சென்றனர்



**கொடைக்கானல்,**

கொடைக்கானல் கீழ்மலை பகுதிகளில் பலாப்பழம் விற்பனை அமோகமாக நடந்து வருகிறது.

## பலாப்பழ விளைச்சல் அதிகரிப்பு

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் கீழ்மலைப்பகுதியில் அடுக்கம், பெருமாள்மலை, மேட்டுப்பாறை, வாழைகிரி, மச்சூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பல ஏக்கர் பரப்பளவில் பலாபழம் பயிரிடப்பட்டுள்ளது. இதில் அடுக்கம் பகுதியில் விளையும் பலாப்பழம் சுவை மிகுந்ததாக இருக்கும்.

கொடைக்கானல் பகுதிகளில் வழக்கமாக கோடைகாலத்தில் பலாப்பழம் விளைச்சல் குறைவாக காணப்படும். ஆனால் இந்த ஆண்டு பலாப்பழ விளைச்சல் சற்று அதிகரித்து உள்ளது. இதன்காரணமாக கொடைக்கானல்–மதுரை சாலையில் மச்சூர் என்னும் இடத்தில் சாலையோரங்களில் ஆங்காங்கே பலாப்பழங்கள் விற்பனைக்கு குவித்து வைக்கப்பட்டு உள்ளன.

## விற்பனை அமோகம்

இந்த பலாப்பழங்களை கொடைக்கானலுக்கு வரும் சுற்றுலா பயணிகள் வாங்கிச் செல்கின்றனர். இதனால் சாலையோர கடைகளில் பலாப்பழ விற்பனை அமோகமாக நடந்து வருகிறது. இந்த பழங்கள் ரூ.50 முதல் ரூ.200 வரை விற்கப்படுகிறது.

இன்னும் சில சுற்றுலா பயணிகள் பலாப்பழ சுளைகளை அங்கேயே வாங்கி ரசித்து சாப்பிட்டனர். இதனால் அந்த பகுதிகளில் உள்ள கடைகளில் சுற்றுலா பயணிகளின் கூட்டம் அதிகம் காணப்பட்டது.

## அக்னிநட்சத்திர தொடக்கநாளில் மழை வெப்பத்தின்தாக்கம் குறைந்து குளிர்ந்த காற்று வீசியது



**மதுரை,**

அக்னிநட்சத்திரம் தொடக்க நாளில் மழை பெய்ததால் வெப்பத்தின் தாக்கம் குறைந்து குளிர்ந்த காற்று வீசியது.

**அக்னிநட்சத்திரம்**

தமிழகம் முழுவதும் கடந்த 3 ஆண்டுகளாக பருவமழை பொய்த்தது. மதுரை மாவட்டத்தில் மழை இல்லாததால் வைகை ஆறு, கண்மாய், குளங்கள் வறண்டன. இதனால் மதுரை நகரின் குடிநீர் பிரச்சினை விஸ்வரூபம் எடுத்து வருகிறது. அத்துடன் கோடை வெயிலும் கடுமையாக சுட்டெரித்தது. இதற்கிடையில் ஆறுதல் தரும் விதமாக மதுரை மாநகரிலும், மாவட்டம் முழுவதும் பரவலாக கடந்த 29–ந்தேதி இடி– மின்னலுடன் 1 மணி நேரத்திற்கும் மேலாக மழை கொட்டியது. நேற்று முன்தினமும் பரவலாக மழை விழுந்தது.

இந்த நிலையில் நேற்று முதல் அக்னி நட்சத்திரம் தொடங்கியது. அக்னி நட்சத்திரம் என்றாலே வெயில் சுட்டெரிக்கும். ஆனால் நேற்று காலை முதலே வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. அவ்வப்போது லேசான மழைபெய்தது. அத்துடன் இடையிடையே வெயிலும் அடித்தது. அதனால் வெயிலின் தாக்கம் இன்றி பகலிலும் இதமான குளிர்ந்த காற்று வீசியது.

**மழை அளவு**

மதுரை, தேனி மாவட்டங்களில் நேற்று காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு:–

, தேக்கடி–67.81, பெரியாறு அணை–46, விரகனூர்–43, சாத்தையாறு–30.2, கள்ளந்திரி–25.4, உத்தமபாளையம்–24, வீரபாண்டி, மேட்டுப்பட்டி–18, ஆண்டிப்பட்டி–14.2, புளிப்பட்டி–15.6, குப்பணம்பட்டி, சோத்துப்பாறை–10, மேலூர்–9.6, பேரணை–9, இடையபட்டி–8, மஞ்சளாறு–6, சிட்டம்பட்டி–4, மதுரை–3.4, வைகைஅணை2.6, சண்முகாநதி–2.

மழையால் பெரியாறு அணைக்கு தண்ணீர்வரத்து உள்ளது. பெரியாறு அணையின் நீர்மட்டம் நேற்று 109.90 அடியாக இருந்தது.

அணைக்கு வினாடிக்கு 274 கனஅடிதண்ணீர் வந்தது. அணையில் இருந்து 100 கனஅடிதண்ணீர் திறக்கப்பட்டது. அணையில் 895 மில்லியன் கனஅடிதண்ணீர் இருப்பு உள்ளது.

<u>நீர்மட்டம்</u>

வைகை அணை நீர்மட்டம் இதுவரை இல்லாத அளவிற்கு குறைந்து வருகிறது. நீர்மட்டம் நேற்று 21.39 அடியாக இருந்தது. வைகை அணைக்கு நேற்று வினாடிக்கு 5 கனஅடி தண்ணீர் வரத்து ஏற்பட்டது. அணையில் இருந்து வினாடிக்கு 40 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டது. அணையில் 127 மில்லியன் கனஅடி தண்ணீர் மட்டுமே இருக்கிறது.

## ரூ.13 கோடி மதிப்பிலான கிருதுமால் நதி இணைப்பு திட்டம்; உலக வங்கி குழு ஆய்வு



வைகை-கிருதுமால் இணைப்பு கால்வாய்திட்ட பணிகளை உலக வங்கி குழுவினர் பார்வையிட்டு ஆய்வு செய்த போது எடுத்த படம்.

**சிவகங்கை,**

ரூ.13கோடி மதிப்பில் நடைபெற்று வரும் கிருது மால் நதி இணைப்பு திட்டத்தை உலக வங்கி குழுவினர் ஆய்வு செய்த னர்.

சீரமைப்பு பணி

வைகையாற்றுடன் கிருது மால்நதி இணைக்கப்பட்டுள் ளது. வைகை- கிருதுமால் நதியின் இணைப்பு கால்வாய் சீரமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. உலக வங்கி நிதி உதவியுடன் நடை பெறும் .

இந்த பணி சிவ கங்கை மாவட்டத்தில் ரூ.13 கோடி மதிப்பில் பொதுப் பணித் துறை மூலமாக சீரமைக்கப் பட்டு வருகிறது.

இதில் 4.50 கிலோமீட்டர் தூரத்திற்கு இணைப்பு கால்வாய், சிமெண்டு வாய்க்கால் அமைக் கும் பணி நடைபெற்று வரு கிறது.

வைகை நதியில் வெள்ளம் ஏற்படும் காலங்களில் உபரி நீரை இந்த இணைப்பு கால் வாய் மூலமாக கிருதுமால் நதியை இணைத்து சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங் களில் உள்ள 35 பாசன கண் மாய்களுக்கு பாசன வசதி அளிக்க திட்டமிடப்பட்டுள் ளது.

இதன் மூலம் 10 ஆயிரம் ஹெக்டேர் நிலம் பயன் அடையும். இந்த பணிகளை உலக வங்கி குழு நிபுணர் மல்கோத்ரா நேரில் பார்வை யிட்டு ஆய்வு செய்தார். பணி களின் தரம் மற்றும் செயல் படுத்தப்படும் விதம் குறித்து அவர் அதிகாரிகளிடம் ஆய்வு நடத்தினார்.

ஆய்வின்போது, தமிழ்நாடு நீர் மேலாண்மை இயக்குனர் ராஜகோபால், மதுரை மண் டல தலைமை பொறியாளர் தமிழரசன், கண்காணிப்பு பொறியாளர் அன்பழகன், நீர் வள, நில வள திட்டத்தின் ஆலோசகர் ராஜகோபால், செயற் பொறியாளர் சுந்தர மூர்த்தி மற்றும் பொதுப் பணித்துறை அதிகாரிகள் உடன் வந்தனர்.

முன்னதாக பாசன சங்க நிர்வாகிகள் ராஜேந்திரன், கிருஷ்ணன் ஆகியோரிடம் விசாரித்து அறிந்தனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கத்தரி தொடங்கிய நாளில் தமிழகத்தில் பரவலாக மழை: 48 மணி நேரத்துக்கு மழை நீடிக்கும்



கத்தரி வெயில் தொடங்கிய நாளில் தமிழகத்தில் பரவலாக, குறிப்பாக தென் மாவட்டங்களில் மழை பெய்துள்ளது. வேலூர், திருச்சி உள்ளிட்ட சில மாவட்டங்களில் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது.

தென் மேற்கு வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை தாழ்வுப் பகுதியாக மாறியுள்ளதால், அடுத்த 48 மணி நேரத்தில், தென் மாவட்டங்களில் பல இடங்களில் மழை பெய்யும் எனவும், வட மாவட்டங்களில் சில இடங்களில் மழை பெய்யும் எனவும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென் மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கன மழை பெய்யவும் வாய்ப்புள்ளது.

தமிழகத்தில் கத்தரி வெயில் தொடங்கியுள்ளது என்று தெரியாத அளவுக்கு, திருவாரூர் மாவட்டம் கொடவாசல், ராமநாதபுரம் மாவட்டம் கமுதி, கன்னியாகுமரி மாவட்டம் மயிலாடியில் 7 செ.மீ. மழை பெய்துள்ளது. அதே போன்று மதுரை மாவட்டம் பேரையூர், விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் மற்றும் வத்றாப், தேனி மாவட்டம் பெரியார் ஆகிய இடங்களில் தலா 5 செ.மீ. மழை பெய்துள்ளது.

மதுரையையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் சனிக்கிழமை மாலை முதலே லேசான தூரல் இருந்தது. ஞாயிற்றுக்கிழமை காலை வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. மதியம் முதல் பரவலாக பல இடங்களில் மழை பெய்தது. இதே போன்று திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் மழை விட்டுவிட்டு பெய்து கொண்டே இருந்தது. கன்னியாகுமரியில் உள்ள திற்பரப்பு அருவியில் நீர்வரத்து அதிகமாகியுள்ளது.

வேலூர் மாவட்டம் கலவையில் மட்டும் 4 செ.மீ. மழை பதிவாகியுள்ளது. அது தவிர மற்ற இடங்களிலும், திருச்சியிலும் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. மாலையில் புழுக்கமாக இருந்ததாக பொது மக்கள் கூறினர். கோவை மாவட்டம் வால்பாறையில் 3 செ.மீ. மழை பதிவாகியிருந்தாலும், மற்ற இடங்களில் வெயிலின் தாக்கம் கடுமையாக இருந்தது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.ஆர்.ரமணன் கூறுகையில், “தென் மேற்கு வங்கக் கடலில் சனிக்கிழமை குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியிருந்தது. அது, ஞாயிற்றுக்கிழமை குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக மாறியது. இது தமிழக கடற்கரையை நோக்கி வருவதால், அடுத்த 48 மணி நேரத்தில், தென் மாவட்டங்களில் பரவலாக மழையும், சில இடங்களில் இடியுடன் கூடிய மழையும் பெய்ய வாய்ப்புள்ளது. வட மாவட்டங்களில் ஆங்காங்கே மழை பெய்யும்” என்றார். தமிழகத்தில் அதிகபட்சமாக திருப்பத்தூரில் 100.04 டிகிரியும் குறைந்த பட்சமாக கொடைக்கானலில் 66.02 டிகிரியும் வெயில் பதிவானது. வேலூரில் 99.6 டிகிரி, சேலத்தில் 98.9 டிகிரி, திருச்சியில் 98.7 டிகிரியும் வெயில் பதிவானது.

எத்தனை நாளாச்சு: சென்னை மதுரவாயல் பைபாஸ் சாலையில் கொட்டும் மழையில் சுகமாக நனைந்தபடியே செல்லும் வாகன ஓட்டிகள். படம்: எம்.வேதன்

**கத்தரி வெயில்: ரமணன் கருத்து**

சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது: கத்தரி வெயில் என்பது வானிலை ஆய்வுத் துறையின் வார்த்தை கிடையாது. அது பஞ்சாங்கத்தின் வார்த்தை. மேஷ ராசியில் சூரியன் நுழைவதை கத்தரி வெயில் என்பார்கள். வானிலை ஆய்வுத் துறை ராசியின் அடிப்படையில் இயங்குவதில்லை.

மே மாதம் வெப்பம் அதிகரிக்கும்தான். இது வருடா வருடம் நிகழும் இயல்பான செயல். எனவே கத்தரி வெயில் எப்போது தொடங்கும், எப்போது முடியும் என்று வானிலை துறை கூறுவதில்லை என்றார்.

ஜோதிடர் சந்திரசேகர பாரதி இது குறித்து கூறுகையில், " பஞ்சாங்கத்தின் கணிப்புகள்படி, கத்தரி வெயில் மே 4-ம் தேதி தொடங்கி 28-ம் தேதி முடியும். கத்தரி வெயில் 25 நாட்கள் இருக்கும். நெருப்பு கிரகமான சூரியன் பரணி நட்சத்திரத்தில் இருக்கும்போது கத்தரி வெயில் ஆரம்பிக்கும். சூரியன் மேஷ ராசியில் வரும்போதுதான் உச்சத்துக்கு போவார்" என்றார்.